பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 13 வியாழக்கிழமை (29.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 03

# கொழும்பில் குண்டுவெடிப்பு!

# 18 பேர் பலி!! 40 பேர் காயம்!!

## நுகேகொட கடைத்தொகுதியில் மாலைநேர அனர்த்தம்

கொழும்பு,நவ. 29

**கொழும்பு, நுகேகொடை, அரசமரச் சந்தியில் நேற்றுமாலை 5.55 மணிக்கு - மக்கள் திரண்டிருந்த வேளையில் - திடீரென இடம்பெற்ற மிக மோசமான குண்டு வெடிப்பில் 18 பேர் வரைப் பரிதாபமாக உயிரிழந்தனர். 40 பேர் வரை படுகாயமடைந்தனர்.**



அரசமரச் சந்தியில் ஆடைகள் விற்கும் பிரபல வர்த்தக நிறுவனமான 'நோ - லிமிட்' கடைத் தொகுதியை அண்டியே இக்குண்டுவெடிப்பு நிகழ்ந்திருக்கின்றது.

அந்தக்கடைத் தொகுதிக்கு பொதி ஒன்றுடன் வந்த ஒருவர் வாசலில் பொதிவைக்கும் இடத்தில் அதை வைத்துவிட்டுச் சென்றார் என்றும் -

எனினும், சற்று நேரத்தில் அந்தப்பொதியை மீளப் பெறாமல் கடையில் இருந்து அவர் வெளியேறுவதை அவதானித்த சிப்பந்திகள், அதனால் சந்தேகம் ஏற்பட, பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர் என்றும், பொலிஸார் வந்து பொதியைச் சோதனையிட்ட போது அது வெடித்தது என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் குண்டுவெடிப்பில் 18 பேர் உயிரிழந்தனர். சுமார் 40 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

இக்குண்டு வெடிப்பினால் பஸ், பல மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கடைத் தொகுதி என்பன தீப்பற்றி எரிந்தன. கடும் போராட்டத்தின் பின்னர் தீயணைப்புப் படையினர் தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மேல் மாகாணத்தில் இன்று நாளையும் பாடசாலைகள் மூடப்படும்

மேல் மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளும் இரு தினங்கள் மூடப்பட்டிருக்கும் என்று கல்வி அமைச்சு நேற்றிரவு திடீரென அறிவித்திருக்கின்றது.

மேல் மாகாணத்தின் சகல பாடசாலைகளும் இன்றும் நாளையும் (29 ,30 ஆம்) திகதிகளில் மூடப்பட்டிருக்கும் என்றும், எதிர் வரும் மூன்றாம் திகதி கல்விச் செயற்பாட்டிற்காகப் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் எப்பகுதியிலும் எந்நேரத்திலும் புலிகள் தாக்கலாம்; உஷாராக இருங்கள்!

### பஸில் ராஜபக்ஷ முன்னெச்சரிக்கை

கொழும்பு,நவ.29

புலிகள் நாட்டின் எப்பகுதியிலும் - எந்நேரத்திலும் - தாக்குதலை நடத்தலாம் என்றும், நாட்டு மக்கள் இது தொடர்பாக மிக விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகரும், அவரின் சகோதரரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று முன்தினம் ஆற்றிய மாவீரர் தின உரை பற்றி சர்வதேச சமூகத்தின் கருத்துகளைத் தாம் பெற்றுள்ளார் என்றும் அவர் கூறினார்.

டக்ளஸ் தேவானந்தா போன்ற தமிழ்த் தலைவர்களைக் கொலை செய்வதற்குத் தாம் எடுக்கும் முயற்சிகளைப் புலிகள் உடன் நிறுத்த வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதிகளை நாம் ஒரு போதும் நம்ப முடியாது. அவர்கள் எப்போதும் யார் மீதும் தாக்குதல் நடத்தக்கூடியவர்கள்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## நாவின்ன சந்தியிலும் நேற்றிரவு குண்டு மீட்பு

கொழும்பு, நவ. 29

மஹரகம,/நாவின்ன சந்தியில் நேற்றிரவு சந்தேகத்திற்கிடமான முறையில் வைக்கப்பட்டிருந்த பொதி ஒன்றில் இருந்து சக்தி வாய்ந்த குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது என ஊடகத் தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது.

இதனைச் சோதனையிட்ட பொலிஸார் குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவித்து குண்டை செயலிழக்கச் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(சி)

# அமைச்சர் டக்ளஸின் அலுவலக முற்பகுதியில் பெண் தற்கொலைக் குண்டுதாரி தாக்குதல்!

### பொதுசன அதிகாரி மரணம்; மற்றும் இருவர் காயம்

கொழும்பு, நவம்பர் 29

கொழும்பு, நாரஹேன்பிட்டியவில் உள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு அலுவலகத்துக்குள் நேற்றுக்காலை நுழைய முற்பட்ட பெண் தற்கொலைத் தாக்குதல் குண்டுதாரி ஒருவர், அங்கு குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்துள்ளார். அக்குண்டு வெடிப்பில் அமைச்சர் டக்ளஸின் பொதுசனத் தொடர்பு அதிகாரி படுகாயமடைந்து பின்னர் மரணமானார். மற்றும் இருவர் இந்தச் சம்பவத்தில் காயமடைந்திருக்கின்றனர்.

இசிப்பத்தான மாவத்தையில் உள்ள சமூக நலத்துறை அமைச்சின் முற்புறத்தில் - பொதுஜனத் தொடர்பு அலுவலகத்தில் - இக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

நேற்று புதன்கிழமை, வழமையாகப் பொதுமக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்திக்கும் தினமாகும். நேற்றுக்காலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தம்மை ஒருபோதும் விடுதலைப் புலிகளால் கொல்லமுடியாது என்கிறார் தேவானந்தா

கொழும்பு,நவ.29

தேசியப் பிரச்சினைக்கு அமைதிப் பேச்சு மூலம் தீர்வு எட்டப்படும் வரை புலிகளால் ஒருபோதும் தன்னைக் கொலை செய்யவே முடியாது என்றும், புலிகள் தன்னைக் கொலைசெய்ய மேற்கொள்ளும் எந்த முயற்சியும் வெற்றியளிக்காது என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துத் தம்மைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முயற்சி தொடர்பாக விளக்கினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் ஜனநாயகத்தைக் கண்டு அஞ்சுவதையே கொலைமுயற்சி காட்டுகிறது

### ஈ.பி.டி.பி. கண்டன அறிக்கை

கொழும்பு நவ. 23

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைக்கும் நேற்றைய தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் எனத் தெரிவித்து, அந்த நடவடிக்கையை ஈ.பி.டி.பி. கண்டித்திருக்கின்றது.

இது தொடர்பாக அக்கட்சி நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஓலங்களும், கெஞ்சல்களும் நிறைந்ததே பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தி

கொழும்பு,நவ.29

புலிகளின் தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் ஆற்றிய உரை வெறும் ஓலங்களும், கெஞ்சல்களும் நிறைந்ததுதான்.

- இப்படி விமர்சனம் செய்திருக்கின்றார் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் அக்கட்சியின் செயலாளருமான விமல் வீரவன்ஸ.

நேற்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

புலிப் பயங்கரவாதத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் வெளியிடப்பட்ட 'நம்பிக்கையின்மையின் வெளிப் பாட்டின் மீது' ஒரு சில காரணங்களுக் காகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.



எந்த முறையிலாவது நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தாலும் பிரபாகரனுடைய மாவீரர் தின அறிக்கை, அவரது நம்பிக்கையின்மையின் வெளிப்பாடாகவே தெரிகிறது. அது வேதனைத் தரக்கூடிய படுதோல்வியிலிருந்து மீள்வதற்காக, வெளியிலிருந்து உதவிக்காகக் கெஞ்சும் நிர்க்கதியான ஒருவரது ஓலமேயல்லாது வேறொன்றுமல்ல.

நம்பிக்கையின்மையில் வீழ்ந்து அதன்மூலம் பரஸ்பரவிரோத தேவைகளை ஒரே நேரத்தில் பிரதிநிதிப்படுத்தும் ஒருவரது மனக்குழப்பத்தின் வெளிப்பாடுதான் அவரது இந்த உரை.

இப்போது ஏமாற்றத்தின் விளிம்பில் தொங்கிக் கொண்டிருக்கும் பிரபாகரன் என்ற 'விடுதலைத் தலைவர்' இன்று ஏகாதிபத்தியவாதிகளிடம் தனக்கும் அந்த அகப்பையாலேயே பங்கிடும்படி பிச்சை கேட்கிறார். தனது மீட்சியாளராக யாரையுமே நம்பமுடியாத நிலையில் பிரபாகரன் இருப்பது இதன் மூலம் தெரிகிறது. தான் நம்பிக்கை வைக்க வேண்டியது தனது சர்வதேச எஜமானர்களிடம் மாத்திரமே என்ற நிலைக்கு பிரபாகரன் தள்ளப்பட்டுள்ளார். 'ஆர்.டூ.பி' அல்லது 'பாதுகாப்பதற்கான பொறுப்பு' என்ற ஆயுதங்களோடு திடீரெனத் தாக்கும் போலி அமைதிகாக்கும் படை நடவடிக்கையின் மூலமாகவாது, ஏகாதிபத்திய சார்பு படுகுழியில் இலங்கை அரசையும் தள்ளக்கூடிய மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் - அது, வடக்கு கிழக்கு மக்களின் விருப்பு வெறுப்புகளை மாத்திரம் அறியும் அபிப்பிராய வாக்கெடுப்பாகுமென்பதை மறக்கக்கூடாது - மூலமாவது தனது கற்பனை இராச்சியத்மதை நிர்மாணிக்க எண்ணும் நிலைக்குபிரபாகரன் ஆளாகியுள்ளார்.

ஏமாற்றத்தின் வெளிப்பாட்டின் மூலம் இன்னொரு விடயத்தையும் பிரபாகரன் எம் முன்னால் வைத் துள்ளார். அது இலங்கை அரசு ஒருதலைப் பட்சமாக யுத்த நிறுத்தத்தை மீறியிருக்கிறதுஎன்பதாகும். அவருக் கேற்ப இலங்கை அரசு ஒரு தலைப் பட்ச யுத்த நிறுத்தத்தின் மூலம் 'கொடூரமான யுத்தச் செயற்பாடு களில் ஈடுபட்டிருக் கின்றது.

2002 பெப்ரவரி 22ஆம் திகதி ஒப்பமிடப்பட்ட ஒப்பந்தத்துக்கு தாங்களும் இப்போது பொறுப்புக் கூறவேண்டியதில்லை என்பதை புலிபயங்கரவாதத் தலைவர் சொல் லாமல் சொல்கிறார். போர்-நிறுத்த ஒப்பந் தம் ரத்துச் செய்யப் பட்டிருக் கின்றது என்று கூறுவதன் மூலம் தற்போது அவ்வாறான ஒப்பந்தமொன்று இல்லையென்றே கூறுகிறார்.

ஏமாற்றத்தின் மனோநிலையால் வழி நடத்தப்படும் பிரபாகரன் இதன் மூலம் பெற்றுக் கொடுத்திருக்கும் சந்தர்ப்பத்தை இந்த அரசு நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பிரபாகரன் இவ்வாறு கூறியிருப்பதன் மூலம், போர்நிறுத்த கண்காணிப்பாளர்களாகத் தொடர்ந்தும் இந்த நாட்டில் காலம் கடத்தும் ஸ்கண்டினேவிய நாடுகளின் ஓய்வுபெறும் வயதைக் கடந்தவர்களை இந்த

(9ஆம் பக்கம் பார்க்க)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் (BMICH) 23.11.2007 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) சான்றிதழ் பெற்ற

**ஜீவகலா இராஜதுரை**

(நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - உ.அ.அ.பணிமனை, காரைநகர்)

அவாகள் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்புற அன்புடன் வாழ்த்துகின்றோம்.

மானிப்பாய். (சி/54518) குட்டி அண்ணா குடும்பம்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



ராஜன் - கிரிஜா தம்பதியரின் செல்வப் புதல்வன்

**ராஜஷியான்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று(29.11.2007)வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். அவரை ஆலடி விநாயகர் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவோர்:

*அம்மம்மா,*
*மாமாமார், தங்கராஜா குடும்பம்,*
*சிவராஜா குடும்பம்(கொழும்பு),*
*அம்பிகைராஜா குடும்பம் (சுவிஸ்),*
*பபிச்சந்திரன் குடும்பம் (டென்மார்க்),*
*ஜெயராஜா குடும்பம்,*
*முருகதாஸ் குடும்பம் (திருகோணமலை),*
*பெரியப்பாமார் பாஸ்கரசிங்கம் குடும்பம்(கனடா),*
*Dr.V.கணேசவேல் குடும்பம்,*
*சித்தப்பாமார் ரஞ்சன், ரங்கன், மேனகா அத்தை.*

*அன்னை இல்லம், உரும்பிராய் வடக்கு.*

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூத்த ஆசிரியை அமரர் அமிர்தாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், கல்லூரி பழைய மாணவி திருமதி மாதினி ஸ்ரீதரன் அவர்களின் அன்புத் தந்தையுமான



**செல்லையா சதாசிவம்**

அவர்கள் காலமாகிய செய்தி கல்லூரி சமூகத்திற்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/54514)

**பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஊழியர்
பரராஜசிங்கம் குணரத்தினம் (கண்ணன்)
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சரஸ்வதி பரராஜசிங்கம்**

(வழுப்போடை, காரைநகர்)

அவர்கள் 26.11.2007 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொழும்பு. **ஓசானிக் இம்பெக்ஸ் நிறுவனமும் ஊழியர்களும்.**

## OFFER OFFER OFFER

| | |
|---|---|
| CRT Original View Sonic 15" | 12000/= |
| CRT 17" | 15750/= |
| Blostar Mother borard DDR-2 | 6500/= |
| Asrock Mother borard DDR-2 | 7300/= |
| LCD Monitor | 24000/= |
| HP 1460 Printer | 6300/= |
| HP All In one | 14500/= |
| HP Office Jet (Fax, Printer, Scanner, photocopy) | 21000/= |
| Epsonlg- 300 + 2 Printer | 22000/= |
| Scanner | 7400/ |
| VGA Card | 3900/= |
| DVD R/W (Samsung) | 4800/= |
| Creative 2.1 Boofers | 4500/= |
| Creative 5.1 Boofers | 10500/= |
| Kingston 256 DDR- 2 Ram | 1950/= |
| Kingston 512 DDR- 2 Ram | 2500/= |
| Kingston1 GB DDR- 2 Ram | 4650/= |
| SD Ram | 1750/= |
| USB Mouse | 400/= |
| USB Cable | 95/= |
| Kingston 1 GB USB | 1500/= |
| Kingston 2 GB USB | 2500/= |
| Class 1 CD Cover | 25/= |
| Plastic 2 CD Cover | 15/= |

மற்றும்

Power Supply, Optical Mouse, Head Phone, T.V Card, Fax modem, CPU Colling Fan, Processor, Hard Disks, UPS, Key Board போன்றவற்றை உத்தரவாதத்துடன் நியாய விலையில் பெற்றுக் கொள்ள உடன் நாடுங்கள்:

**MUSIC WORLD**

141B, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

* Warranty உரிய பொருள்களுக்கு 1 Year முதல் 3 Year வரை Warranty வழங்கப்படும். (சி/54480)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியஜயர் கேதீஸ்வரசர்மா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பிரான்பற்று முத்துமாரியம்மன்கோயிலை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியஜயர் கேதீஸ்வரசர்மா நேற்று (28.11.2007) புதன் கிழமை காலமானார்.

அன்னார் கும்பகோணத்தைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட அமரர் சுப்பிர மணிய ஐயர் மற்றும் சரஸ்வதி அம்மா தம்பதியரின் இளையமகனும், சுபாஜினி (கொட்டக்கலை) அவர்களின் அன்புக் கணவரும், ஜெனதீஸ்வரி, கெங்கேஸ்வரக் குருக்கள் (அராலி, கோட்டைக்காடு), வைத்தீஸ்வரக் குருக்கள் (கண்ணன்ஐயா, பிரான்பற்று), பாலாம்பாள் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிரமணிய சர்மா (வட்டுக்கோட்டை), பாலேஸ்வரி, கம்சவல்லி, நிரஞ்சனன் (சுகாதாரத் திணைக்களம், வவுனியா)ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2007) வெள்ளிக் கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முத்துமாரியம்மன் கோயில்,
பிரான்பற்று,
பண்டித்தரிப்பு.

தகவல்
சு.வைத்தீஸ்வரக் குருக்கள்(கண்ணன்ஐயா)

### கந்தையா நடராசா

வரணி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நடராசா நேற்று (28.11.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், ஜெ.உமாதேவி (ஆசிரியை, மீசாலை கமலாம் பிகை வித்தியாலயம்), ஜெகதீஸ்வரன் (சாரதி, ஹலோ றஸ்ட்) ஆகியோரின் தந்தையும் ஜெயவீரசிங்கம் (ஆசிரி யர்,சா/இந்துக் கல்லூரி), ஜெயசர்மிலா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2007) வியாழக் கிழமை அவரது இல்லத் தில் நடைபெற்று, பூத வுடல் பிற்பகல் ஒருமணியளவில்கொற்றாவத்தைஇந்துமயானத்தில்தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
கச்சாய் வீதி, சாவகச்சேரி

தகவல்:
பிள்ளைகள்

### செல்லையா சதாசிவம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை (மஞ்சவனப்பதியடி) வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சதாசிவம் அவர்கள் 27.11.2007 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற பண்டிதை அமிர்தாம்பிகை (முன்னாள் ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், திருமதி மாதினி ஸ்ரீதரன் (அமெரிக்கா) அவர்களின் பாசமிகு தந்தையும், சிறிதரன் அவர்களின் அன்பு மாமனாரும், ரஜீவ், பிரதீப், சஞ்ஜீவ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திரு.திருமதி மாணிக்கவாகர் (சட்டத்தரணி) தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.11.2007) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஐ.ஜெகநாதன் குடும்பத்தினர்,
பாலா குடும்பத்தினர்.

145, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தொ.பே: 0776165380, 0776132549

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

(சிற்ப ஆசாரியார்)



இல. 109, நாயன்மார் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (28.11.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், நல்லதம்பி- செல்வராணி தம்பதியரின் மருமகனும், தவயோகராணியின் கணவரும், கோகிலா, கௌசீலன், ரேணுகா, ஜெயசீலன் ஆகியோரின் தந்தையும், அருளாணந்தம், சுகதரன், லேகா ஆகியோரின் மாமனும் குணாளன், லதுஷன், அபிநயா, தர்சிகன், நர்மதன் ஆகியோரின் பேரனும் பேபி, திலகம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2007) வியாழக் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 109, நாயன்மார் வீதி,*
*நல்லூர்.*

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு ப.நோ.கூ.சங்கத்தின் வசமுள்ள படகை திருத்தியமைத்து மீண்டும் சேவையை ஆரம்பிக்குக!

## வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் மக்கள் கோரிக்கை

நல்லூர், நவ.29

அனலைதீவு - ஊர்காவற்றுறை கடற் போக்குவரத்துக்கு அனலைதீவு பல நோ.கூ. சங்கத்திற்கென யாழ்.அரச அதிபரால் வழங்கப்பட்ட படகை திருத்தியமைத்துப் பயன்படுத்துமாறு அனலைதீவு மக்கள் கோரியுள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன் யாழ். அரச அதிபரால் அனலைதீவு நெடுந்தீவு பல நோ.கூ. சங்கங்களுக்கு இந்திய இழுவைப் படகுகளைத் திருத்தியமைத்து சங்கங்கள் தமது கடல் போக்குவரத்திற்குப் பயன்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் குறிப்பிட்ட படகுகளைத் திருத்திமைக்கத் தேவையான நிதி வசதிகள் இச்சங்கங்களிடம் இல்லை என்பதால் அனலைதீவில் ஒரு படகும் நெடுந்தீவில் இரண்டுமாக துறைமுகப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் அனலைதீவு பல நோ.கூ.சங்கம் தமது படகை விற்பனை செய்யவுள்ளதாகக் தகவல்கள் கிடைப்பதாக கூறும் அனலைதீவு மக்கள் குறிப்பிட்ட படகை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொள்முதல் செய்து புனரமைப்பதன் மூலம் அனலைதீவு, ஊர்காவற்றுறைக்கான கடற் போக்குவரத்தைத் தொடருமாறு கோரியுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அரச படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என அரச அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனலைதீவு மக்கள் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்தபோதும் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே பொதுமக்களின் தேவையை நிறைவு செய்யக்கூடியதாக குறிப்பிட்ட படகை அனலைதீவு பூல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் இருந்து யாழ்.வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொள்வனவு செய்வதன் மூலம் அனலைதீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையேயான அரச கடற்போக்குவரத்துச் சேவையைத் தொடர முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (50-111)

## டாக்டர் திருமதி குகதாசனுக்கு மருத்துவ பீடத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ்.29

கொழும்பில் கடந்த 25 ஆம் திகதி இறைபதம் அடைந்த யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் தோல் சிகிச்சை வைத்தியரும் யாழ்.மருத்துவபீடத்தின் முன்னாள் வருகைதரு விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி திருமதி குணரஞ்சிதம் குகதாஸ் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணி வரை யாழ்.மருத்துவ பீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவ மாணவர் ஒன்றியம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. இந்நிகழ்வில் மருத்துவ பீட ஆசிரியர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (203)



கட்டைவேலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்புவிழாவும் கலைவிழாவும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வை வடமராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமர் மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், அதிபர் எஸ்.வரதராஜசர்மா, முன்னாள் அதிபர் செல்வி பாலாம்பிகை கந்தசாமி ஆகியோர் நிற்பதையும் மாணவர்களின் வில்லிசை நிகழ்வையும் படங்களில் காணலாம். (218)

## செங்கை ஆழியான் நாவல்கள் பற்றிய ஆய்வு நூல்

யாழ்பபாணம்,நவ,29

செங்கை ஆழியானின் நாவல்கள் பற்றிய ஆய்வு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

கந்தையா முருகதாசன் எழுதியுள்ள ''செங்கை ஆழியான் நாவல்கள் ஒரு திறனாய்வு நோக்கு'' என்ற இந்நூல் யாழ். இலக்கியவட்டத்தின் ஆதரவில் வெளியிடப்படுகின்றது.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆசியுரையையும் பேராசிரியர் சி. சிவலிங்கராசா வாழ்த்துரையையும் கலாநிதி ம. இரகுநாதன் வெளியீட்டுரையையும் கலாநிதி செ. திருநாவுக்கரசு ஆய்வுரையையும் நிகழ்த்துவர். நிகழ்வில் நாவலாசிரியர் செங்கை ஆழியான் கௌரவிக்கப்படுவார். (ப)

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

வலி.தென்மேற்கு, நவ.29

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் யாழ்.சுகாதார திணைக்களத்தின் அனுசரணையுடன் எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு, கருத்தரங்கு ஒன்றை கடந்த 24 ஆம் திகதி சங்கானை கலாசார மண்டபத்தில் நடத்தியது.சுகாதாரத் திணைக்களத்தின் சுகாதாரகல்வி பிரச்சாரப்பிரிவினால் எயிட்ஸ் தொடர்பான திரைப்படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. சம்மேளனத்தின் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் யாழ்.சுகாதார திணைக்கள எயிட்ஸ்தடுப்புப் பிரிவின் இணைப்பாளர் கே.ரி.தயாளன், சுகாதாரக் கல்வி அலுவலர் எஸ்.பிரணவன், சங்கானை பொதுசுகாதார பரிசோதகர் எம்.சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (203-135)

## புங்குடுதீவு சவேரியார் ஆலய வீதியை புனரமைக்க நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

நல்லூர், நவ.29

புங்குடுதீவு அருள்மிகு சவேரியார் ஆலய வீதியின் புனரமைக்கப்படாத பகுதிகளை மக்களின் பங்களிப்புடன் திருத்தியமைக்க உலக உணவுத் திட்டத்தின் உதவியைப் பெற்றுத் தரும்படி புங்குடுதீவு பெருங்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

புங்குடுதீவு கிழக்கு மேற்குப் பகுதி மக்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் போக்குவரத்துச் செய்வதற்கான முக்கிய பாதையான இந்த வீதி காணப்படுகின்றது. இது சேதமுற்று 35 வருடங்களுக்கு மேலாகியும் அதன் புனரமைப்புப்பணிகள் முழுமையாக இடம்பெறவில்லை.

தற்சமயம் இந்த வீதியில் 1221 அடி நீளம் வரை சீரமைக்கப்பட்டுள்ளது. 2000 அடி நீளமான இதில் மிகுதிப் பாகம் சீர் செய்யப்படவில்லை. தற்சமயம் பெய்துள்ள மழை காரணமாக வீதியின் மணல் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

முக்கிய வீதியான இவ் வீதியை மக்களின் பங்களிப்புடன் புனரமைக்க உலக உணவுத் தாபனத்தின் உதவியைப் பெற்றுத் தருமாறு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் கே.பூராசா அரசஅதிபரைக் கடித மூலம் கேட்டுள்ளார். (203-111)

## தெணியானின் சிறுகதைத் தொகுப்பு ஞாயிறன்று வெளியீடு

யாழ்பாணம், நவ.29

தெணியானின் 'இன்னொரு புதிய கோணம்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி, தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பூமகள் சனசமூக நிலையத் தலைவர் இ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் எஸ்.சத்திய சீலன், வடமராட்சி வடக்கு கிழக்கு பிரதேச செயலாளர் எஸ். பசுபதி, தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.குட்டித்தம்பி ஆகியோர் கலந்து கொள்வர். விழாவில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்த மதிப்பீட்டுரையை கோப்பாய் றோ.க.த.க.பாட சாலை அதிபர் ச.லலீசன், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து நூலாசிரியர் உரை இடம் பெறும். (203)



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காயில் உள்ள ஐயன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்கு தலில் கொல்லப்பட்ட பாடசாலைச் சிறுமிகளில் சிலர்.

## முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.29

மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு மாகாணத்தில் 55 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் 30 நிலையங்களில் நடைபெறும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் உரியவர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் தமது பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் விவரங்களுடன் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார். (203)




## மின் விளக்கு அன்பளிப்பு

யாழ்பபாணம்,நவ,29

யாழ் கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்துக்கு பக்தர் ஒருவரால் மின் விளக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த மின் விளக்கை நல்லூரைச் சேர்ந்த ச.பெ. வரதராசன் வழங்கியுள்ளார். ஆலய இரண்டாம் கட்டளை அருட்தந்தை பிறைன் அடிகள் கடந்த 14 ஆம் திகதி மின் விள்கை ஒளிரவைத்தார். (203)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்பபாணம்,நவ,29

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ள ஆண் அணிகளுக்கான ஆட்டங்களின் விவரம் வருமாறு-

- கோப்பாய் வி.க. எதிர் பற்றீசியன் வி.க.
- ஜொலிஸ்ரார் வி.க. எதிர் சென்ற லைட்ஸ் சொக்ஸ் வி.க. (50)

## ஆறுமுகநாவலரின் 128 ஆவது குருபூசை விழா

யாழ்ப்பாணம்,நவ.29

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 128 ஆவது குருபூசை விழாவும் அகில இலங்கைச் சைவ நெறித் தேர்வு - 2006 பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சைவபரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புரவலர் த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் கலந்து கொள்வார்.

காலை 8 மணிக்கு விசேட பூசை, திருமுறை ஓதல், வைத்தீஸ்வரக் கல்லூரி மாணவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்து என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

காலை 8.30 மணிக்கு கலாபூஷணம் தாவடியூர் கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி இடம்பெறும்.

தொடர்ந்து சைவபரிபாலன சபையின் சைவசமய பிரசார அமைச்சர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையின் வரவேற்புரை, அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளர் சிவஸ்ரீ சதா.மகாலிங்க சிவக் குருக்களின் அருளுரை என்பன இடம் பெறும்.

இதனையடுத்து வல்லை சிவகுரு வித்தியாசாலை அதிபர் அ.சிவநாதன் 'நாவலர் இன்றிருந்தால்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு திருமதி இ.குமாரவடிவேல் பரிசில்கள் வழங்கி கௌரவிப்பார். (203)

டெங்குக் காய்ச்சல்

டெங்கு நோய்க்குக் காரணமான வைரஸ் கிருமி RNA Flavi virus வகையைச் சேர்ந்தது. இது ஒரு Arbo virus ஆகும். (மூட்டுக்காலியால் காவப்படுவதால்) டெங்கு நோயுள்ள ஒருவருக்கு நுளம்பு கடிக்கும் போது நுளம்பினுள் செல்லும் வைரஸ் கிருமி 8-10 நாள்கள் வரை நுளம்பின் உமிழ்நீர்ச் சுரப்பியினுள் பெருக்கமடைகிறது, அதன் பின் அந்த நுளம்பு ஏனையோரைக் கடிக்கும் போது தனது வாழ்க்கைக் காலம் முடியும் வரை (15-65 நாள்கள்) மற்றவர்களுக்கு வைரஸைக் கடத்துகிறது. வைரஸ் தொற்றிய போதும் நுளம்புக்கு நோய் ஏற்படுவதில்லை.

சுகாதாரத் திணைக்களம்

care

Disasters Emergency Committee

(சி/54392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2007 இல் 163 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மாணவி செல்வி

**சுபவாசினி சைவஇறைமணி**

அவர்களை மேலும் பல கலைகளில் உயர்ச்சி பெற உளமார வாழ்த்துகின்றோம்.

**பெரியன்ரி, சின்னன்ரி குடும்பம்.**

கரணவாய் வடக்கு,
வல்வெட்டித்துறை.

(68423)



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

937 நீலம்

வெற்றி இலக்கங்கள்

**24 26 33 52**

கன்னி

**27-11-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4453253 - 4468545

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 338,012 | 10/- | 3,380,120/- |
| 2 இலக்கங்கள் | 31,055 | 20/- | 621,100/- |
| 1 இல. + லக்கினம் | 30,786 | 30/- | 923,580/- |
| 2 இல. + லக்கினம் | 2,826 | 100/- | 282,600/- |
| 3 இலக்கங்கள் | 820 | 500/- | 410,000/- |
| 3 இல. + லக்கினம் | 82 | 5,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,427,400/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 403,590 | | 7,450,900/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,755,050/-

தொடர் இல. 5342371 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 நொவெம்பர் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 4465652-3-26 |
| கம்பஹா | 4459302-7-93 |
| களுத்துறை | 4467045-4-41 |
| குருநாகல் | 4454271-6-06 |
| கொழும்பு | 4459311-9-33 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



# 27ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 05 ★ 06 ★ 1928



இறப்பு 29 ★ 11 ★ 1980

**அமரர் கந்தையா செல்லத்துரை**

(முன்னாள் அரசாங்க பொதுச்சேவை தொழிற்சங்கத் தலைவர்)

காலத்தின் நியதி மாறாது எமக்கு மட்டும்
கனத்த உள்ளத்தின் நினைவுகள்...!
ஆண்டுகள் பல கடந்தும்
ஆற்றாமையால் வருந்துகின்றோம் ஐயா
நீ வாழ்ந்த பூமி நிழலாடும் நின்முகம்
நிஜமாக எம்முடன் இருக்க
போனதென்ன நீண்ட பயணம்
புகுந்துவிட்டீர் இறையுலகு...!

இல.45, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (சி/54508)

**குடும்பத்தினர்.**


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,நவ.29

சாவகச்சேரி கல்வயல் வேதவனப்பிள் ளையார் கோயில் இலட்சார்ச்சனை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

டிசெம்பர் 15ஆம் திகதி வரை இலட்சார்ச் சனை நடைபெறுமென அறிவிக்கப்பட் டுள்ளது.

* * *

நவாலி,நவ.29

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரத பெருங்கதைப் படிப்பு கடந்த ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் தினமும் முற்பகல் 10.30 மணிமுதல் இடம்பெற்று வருகின்றது.

தொடர்ந்து 21 நாள்கள் இடம்பெறும் இவ்வைபவத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி கஜமுகாசுர சம்ஹாரமும் 15ஆம் திகதி மகாகணபதி ஹோமமும் இடம்பெறும். (1-100)

* * *

சுழிபுரம்,நவ.29

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் விநாயக வழிபாட்டைத் தொடர்ந்து காலைவேளையில் வழிபாடு செய்பவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து ஔவையார் அருளிய விநாயகர் அகவை பாடி வழிபட்டு வருகின்றனர். (203-28)

* * *

சுழிபுரம்,நவ.29

சுழிபுரம் ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரத வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தினமும் அபிஷேக பூசை வழிபாடுகள் நடைபெற்றுப் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு நடைபெற்றுவருகின்றது.

ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ சி.பிறைசூடிக் குரு கிரிகைகளை நடத்தி வருகின்றார். இறுதி நாளன்று பஞ்சமுகப் பிள்ளையார் வீதியுலா வருவார். (203-128)

# ஆலயத்தில் திருட்டு

வலி.தென்மேற்கு,நவ.29

இரவுவேளையில் ஆலயம் ஒன்றின் முன்பக்க கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒலிபெருக்கிக்கு பயன்படுத்தப்படும் அம்பிலிப்யர் இரண்டு, மின்மோட்டர், கிரைண்டர், துவிச்சக்கர வண்டி (சைக்கிள்) ஆகியனவற்றை திரு டிச்சென்றுள்ள துணிகர சம்பவம் பிரான் பற்று கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

பிரான்பற்று ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்தவியாழக்கிழமை இரவு நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவம் குறித்து ஆலய பரிபாலகர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (1-135)

# வலி. மேற்குப் பிரதேச சபையின் நூலகக் கூரை விழும் நிலையில்

வலி.தென்மேற்கு,நவ.29

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங் கானை பட்டின உப அலுவலகத்தின் நிர் வாகத்தின்கீழ் இயங்கிவரும் சங்கானை பட் டின பொதுநூலகத்தின் முன்பக்கக் கூரைக் கட்டடம் சேதமடைந்து இடிந்துவிழும் நிலை யில் உள்ளது. அத்துடன் மழைகாலங்க ளில் மழைநீர் ஒழுக்கினால் வாசகர்கள் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர். மழைநீர் ஒழுக் கினால் தினசரிப் பத்திரிகைகள் வாசிக்கும் பகுதியில் மழைநீர் காணப்படுகின்றது.

இந்தப் பொது நூலகத்தில் உள்ள மல சலகூடமும் பயன்படுத்தமுடியாத நிலை யில் மூடப்பட்டுள்ளது. கடந்த பலவருட காலமாக பயன்படுத்தமுடியாத நிலையில் இருந்துவரும் இந்த மலசலகூடத்தை புன ரமைப்பு செய்துதர வேண்டும் என்று வாசகர் கள் வலி.மேற்கு பிரதேச சபையிடம் வேண் டுகோள் விடுத்துள்ளனர். (203-135)

# மல்லி விலை உயர்வு

வலி.தென்மேற்கு,நவ.29

யாழ்.மாவட்டத்தில் மல்லியின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. மிளகாய்த் தூள் தயாரிப்பதற்கு மல்லி இன்றியமையாத தொன்றாக இருப்பதால் இவ்விலையுயர்வி னால் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேச பலசரக்குக் கடைகளில் ஒரு கிலோ மல்லி 270 ரூபாமுதல் 280 ரூபாவரை இடத்திற்கிடம் மாறுபட்ட விலைகளில் விற் கப்பட்டு வருகின்றது. (203-135)

# சுழிபுரம் வடக்கில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,நவ.29

சுழிபுரம் வடக்கு, சிவன்கோயிலடி மற் றும் கலட்டிப் பகுதிகளில் கசிப்பு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் சண்டை, சச்சரவுகள் அதிகளவில் இடம் பெற்று வருவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (203-135)


# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

வேலைத்திட்டம் 1 தேர் புனரமைப்பு

பதவி வெற்றிடம்: **பரிசாதக ஐயர்**

மேற்படி வேலைத்திட்டங்களை செய்ய விரும்புபவர்களை எதிர் வரும் சனிக்கிழமை 01.12.2007 முற்பகல் 11 மணிக்கும் மாலை 2 மணிக்கும் இடையில் தேரைப் பார்வையிட்டு அறங்காவல் சபையி னருடன் தொடர்புகொள்ளும்படி அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

**ச.கேசவானந்தன்** J.P.
செயலாளர்.

(சி/54509)





யாழ்.ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்தானம், கோண்டாவில்

சபரிமலை யாத்திரைக் குழு

**மகரஜோதி மண்டல பெருவிழா**

கன்னி சுவாமிமார்களுக்கான விசேட கன்னி சுவாமி பூசை

நாளை (30.11.2007) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. கன்னி சுவாமிமார்கள், பலமலை சுவாமிமார் கள் தவறாது கலந்துகொள்ளவும். விழாவின்போது விசேட பஜனை, சக்தி பூஜை (அன்னதானம்) என்பன நடைபெறும்.

குறிப்பு: எமது ஆலயத்தில் முதன்முறை மாலை அணிந்த கன்னி சுவாமிமார்கள் தவறாது கலந்துகொள்ளவும்.

"அனைவரும் வருக! ஐயன் அருள் பெறுக"

தேவஸ்தான குரு சுவாமியுடன் சாமிமார்கள் **கி.அரிகரசுதசர்மா.**

(68420)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பி முத்துப்பிள்ளை

(அம்மாச்சி)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்துப் பிள்ளை அவர்கள் 26.11.2007 அன்று சிவபத மடைந்துவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனை வியும் விக்னேஸ்வரன் (டோகா), ஜெகதீஸ் வரன் (டோகா), கௌரிதேவி, கௌசலாதேவி, கௌலேஸ்வரி (ஜேர்மனி), விஜயகுமாரி, சுமதி, பாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் யோக ராசா, தவபாலன், சுந்தரலிங்கம் (ஜேர்மனி), சத்தியவான், ரவிச் சந்திரன் (லண்டன்), பைசர், மைதிலி, ராதிகா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2007) வியா ழக்கிழமை M.S.லேன், கோண்டாவிலிலுள்ள மருமகன் இ.தவ பாலனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காகக் கோண்டாவில் கட்டை ஆலடி இந்துமயானத்திற்கு முற் பகல் 11 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

M.S. லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (68421)

தகவல்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## பிரான்ஸிஸ் பாக்கியநாதர்



சென்.ஜேம்ஸ், இளவாலையைப் பிறப்பிட மாகக் கொண்ட பிரான்ஸிஸ் பாக்கியநாதர் நேற்று (28.11.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அன்னம்மா பாக்கியநாத ரின் அன்புக் கணவரும் நேசராணி, மேரிராணி, அருட்பணி. பிரான்ஸிஸ் இராஜசிங்கம் (பங் குத்தந்தை, புனித சூசையப்பர் தேவாலயம், புதுக்குடியிருப்பு), தியோஜினஸ் (தொழில்நுட்ப உத்தியோகத் தர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரனிஸ்லாஸ், சத்தியவதனி (ஆசிரியர், இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட ம.வி) ஆகியோரின் மாமனும் டியோனா எல்சா, ஜோனியல், அன்ரனைனஸ், வரோனியா ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்.ஜேம்ஸ்,
இளவாலை. (68419)

தகவல்:
**பா.தியோஜினஸ்** (மகன்).

## பரமநாதன் சிவக்கொழுந்து

(குப்பிளான் தெற்கு)

குப்பிளான் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதி விடமாகவும் கொண்ட திருமதி பரமநாதன் சிவக்கொழுந்து கனடாவில் 26.11.2007 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - தங்கமுத்து தம் பதியரின் மூன்றாவது மருமகளும் காலஞ்சென்ற தம்பிநாதர் - தங்கம்மா தம்பதியரின் மூத்த மகளும் பரமநாதனின் (கனடா) அன்பு மனைவியும் சச்சிதானந்தன் (குப்பிளான்), குகானந்தன் (கனடா), தயானந்தன் (சுவிஸ்), தயாநிதி (லண்டன்), சதா நிதி (கனடா), யோகானந்தன் (கனடா), சங்கநிதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் புஸ்பராசா (கொழும்பு), இளங் கேசன் (கனடா), வைகுந்தன் (சுவிஸ்), கௌரி (கனடா), சத்தியா (சுவிஸ்), ஸ்ரீரஞ்சினி (குப்பிளான்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கந்தையா (கனடா), இராசையா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்து னியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ஞானம்மா, நேசம்மா, தவமணி, சிவலிங்கம் (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.12.2007சனிக்கிழமை அன்று கனடா மொன்றியலில் நடைபெறும் என்பதை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொ.பே.எண்.:
01-514 2768778,
001 514 7268775
(68426)

தகவல்:
**ப.சச்சிதானந்தன்** (மகன்).
வரியப்புலம், குப்பிளான் தெற்கு.
077 6627594

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் - மலேசியா போன்று பிரிந்து நட்புறவுடன் சுதந்திரமாக வாழவிடுங்கள்!

கொழும்பு,நவ.29

''சிங்கப்பூரும் - மலேசியாவும் சுதந்திரமாக விருப்பத்துடன் பிரிந்து நட்புறவுடன் வாழ்வதுபோல் எங்களையும் சுதந்திரமாகப் பிரிந்து வாழ வழிவிடுங்கள். இதன் மூலம் அவசியமற்ற இரத்தக்களரிகளையும், அப்பாவி சிங்கள, தமிழ் இளைஞர்களின் உயிர் இழப்புகளையும் தடுக்க முடியும்.

''ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடைய நிர்வாக முறையை நாம் ஏற்றுக்கொண்ட போதும், அதனை வழங்க நீங்கள் தயாராக இல்லை. இதனால், தனித் தமிழ் ஈழம் உருவாவதைத் தவிர வேறு வழியில்லை.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

வெளிநாட்டலுவல்கள், தொழில் உறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

இன்று பொதுநலவாய நாடுகள் ஒன்றுகூடி பாகிஸ்தானை அந்த அமைப்பில் இருந்து ஒதுக்கி வைத்துள்ளன. இதே நிலைமை அதி விரைவில் இலங்கைக்கும் ஏற்படும்.

இலங்கையில் இடம்பெறும் மனிதப் படுகொலைகள், இன ஒடுக்கல்கள், சிறுபான்மையினர் மீதான அடக்குமுறைகள் என்பனவற்றைப் பார்த்து அமைதியாக இருக்கும் சர்வதேச சமூகம் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

இன்று இலங்கைக்கு ஆயுதங்களையும், சக்தி மிகு ராடர்களையும் வழங்கும் இந்தியா, அதிவிரைவில் அதன் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள இடமுண்டு.

இலங்கையில் தமிழீழத் தாயகம் உருவாக இந்தியா உதவும். அது இந்தியாவின் பாதுகாப்பு அரணாக அமையும்.

**உறுதியான வெளிநாட்டுக் கொள்கை இல்லை**

இலங்கை அரசிடம் உறுதியான வெளிநாட்டுக் கொள்கை இல்லை. சர்வதேச நாடுகளிடம் சண்டித்தனம் காட்டுகின்றது. அண்டைநாடான இந்தியா, பாகிஸ்தானுடனான உறவுகளையும் சீராக வைத்துக் கொள்ளத் தவறிவிட்டது.

பாகிஸ்தான், இலங்கை அரசுக்குப் பாரிய உதவிகளை வழங்கிவந்துள்ளது. ஆனால், பொதுநல வாயநாடுகள் அமைப்பில் இருந்து பாக்கிஸ்தானை நீக்குவதற்கான பிரேரணை கொண்டுவரப்பட்ட போது இலங்கை பாகிஸ்தானுக்கு எதிராக வாக்களித்துவிட்டது.

இலங்கை அரசின் இந்தச் செயல் பாகிஸ்தானிய அரசினதும் மக்களினதும் வெறுப்பை அதிகரிக்கச் செய்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்பொழுது ஆயுதக்கொள்வனவு செய்வதற்கு ஈரான் சென்றுள்ளார். நாளை மறுநாள் அமெரிக்கா ஈரான் மீது இராணுவத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டால் அப்போதும் கூட ஈரானுக்கு ஆதரவாக ஒருவார்த்தையும் இலங்கை பேசாது என்பதும் உறுதி.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டதை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றீர்கள். அதேபோன்று இங்கும் தடைசெய்ய வேண்டும் என்கிறீர்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இங்கு மட்டுமல்ல, உலக நாடுகளில் எல்லாம் தமிழர்களின் நன்மைக்காக செயலாற்றுகின்றது. ஆழிப்பேரலைப் பாதிப்பின்

## நாடாளுமன்றில் சிவாஜிலிங்கம் முழக்கம்

போது இலங்கையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆற்றிய பணிகள் அரசினாலேயே பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை நீங்கள் தடை செய்தாலும் அதன் உதவி எங்களுக்குத் தொடர்ந்து கிடைப்பதை எவராலும் தடுக்க முடியாது.

**யுனிசெவ் மீதான கண்டனங்கள்**

கடந்த சில நாள்களாக 'யுனிசெவ்' நிறுவனம் மீதான கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றீர்கள்.

'யுனிசெவ்' நிறுவனம் சர்வதேச மட்டத்தில் இன, மத, மொழி, சமூக வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் சமூகப் பணியாற்றிவரும் ஓர் அமைப்பு. இப்பொழுது 'யுனிசெவ்' அமைப்பின்மீதும் புலிச் சாயம் பூசுகின்றீர்கள். ஐக்கிய நாடுகள் உட்பட அனைத்து வெளிநாட்டு அமைப்புகளும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவானவை எனக் குற்றம் சாட்டுகின்றீர்கள்.

அதேவேளை, உள்ளூரில் மனிதப் படுகொலைகளைப் புரிந்து வரும் துரோகக் கும்பல்களுக்கு நிதி வழங்குகின்றீர்கள். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்படும் கைக்கூலிகளுக்கு இராணுவப் பாதுகாப்பை வழங்குகின்றீர்கள். மக்களின் நிதியை வீணடிக்கின்றீர்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த மூன்று தசாப்தங்களாக எந்த ஒரு நாட்டினதும் எந்த ஒரு அமைப்பினதும் உதவிகள் இன்றி தமிழீழப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

**கஞ்சிகுடித்தபோதும் வெற்றி கண்டவர்கள்**

உங்களுடைய ஜயசிக்குறு நடவடிக்கையின் மூலம் ஒட்டுசுட்டான் முதல் வன்னிவரை பிடிக்க இரண்டு ஆண்டுகள் பிடித்தன.

ஆனால், எங்களது தமிழீழ விடுதலைப் புலிகள் 'ஓயாத அலை' எதிர்த் தாக்குதல் மூலம் நான்கே நாள்களில் இழந்த பகுதிகள் அனைத்தையும் மீட்டுவிட்டனர்.

அப்போது அவர்கள் 'யுனிசெவ்' இடமோ வேறு அமைப்புகளிடமோ உதவி கோரவில்லை. கஞ்சியைக் குடித்துக்கொண்டே சண்டையிட்டு வெற்றிகண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பத்துமுறை இந்தியாவுக்குச் சென்று வந்துள்ளனர் என வெளிவிவகார அமைச்சர் கூறினார். பாவம் அவர். ஒரு பொம்மையைப் போன்று தலையாட்டிக் கொண்டிருப்பதை தவிர வேறு எதுவும் அவருக்குத் தெரியாது.





நாடாளுமன்றத்திலிருந்து...

**ஒற்றையாட்சித் தீர்வை நாம் கையால் தொட்டும் பார்க்கமாட்டோம்**

இந்த அரசு தீர்வுத்திட்டம் இதோ வந்துவிட்டது. அதோ வந்துவிட்டது என்று உலக நாடுகளை ஏமாற்றுகின்றது. ஆனால், உருப்படியான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்க அரசு தயாராக இல்லை. அப்படி ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்க ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் விரும்புவதில்லை.

ஒற்றை ஆட்சியின் கீழ் தீர்வு என்பதை

## ஒற்றையாட்சித் தீர்வை நாம் தொட்டும் பார்க்கமாட்டோம்

நாங்கள் கையால் தொட்டுப் பார்க்கவும் தயாரில்லை. அனைத்துக்கட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழுத்தலைவர் பேராசிரியல் திஸ்ஸ விதாரணவுக்கு இப்பொழுது மூச்சடைப்பு ஏற்பட்டுள்ளது. தீர்வுத் திட்டம் தீர்வுத்திட்டம் என்று அவர் பேசிப் பேசிக் களைத்துப்போனார். அவருடைய உயிரைக் காப்பாற்றுங்கள்.

தமிழர்களுக்காக இல்லாவிட்டாலும் பேராசிரியரின் உயிரைக் காப்பாற்றுவதற்காவது ஏதாவது ஒரு தீர்வுத்திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும் - என்றார்.

(சி)

### ஒரு கல்லில் இரு மாங்காய்கள் வீழ்த்துவது போல

# பாக்., இந்தியா இரண்டையுமே இலங்கை பொதுநல நாடுகள் கூட்டத்தில் ஆதரித்தது!



கொழும்பு, நவ. 29

'ஒரு கல்லில் இரு மாங்காய் அடிப்பதுபோல' பொதுநல நாடுகள் அமைப்பின் மாநாட்டில் பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் அதே வேளை, இந்தியாவுக்கு ஆதரவாகவும் இலங்கை செயற்பட்டது என்று வெளி விவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

இந்தியாவுக்குப் பயந்து பாகிஸ்தானையோ அல்லது பாகிஸ்தானுக்குப் பயந்து இந்தியாவையோ இலங்கை எதிர்க்கவில்லை என்றும் அவுர் குறிப்பிட் டார்.

பொதுநலநாடுகள் அமைப்பிலிருந்து பாகிஸ்தானை உடனடியாக இடைநிறுத்தாமல் அந்நாடு ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்ப கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும் -

பொதுநல நாடுகள்அமைப்பின் அடுத்த பொதுச்செயலாளராக இந்தியர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் ஏன்று பிரேரித்து இந்தியாவுக்கு ஆதரவாகவும் - இலங்கை அங்கு பேசியது எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

பொதுநல நாடுகள் அமைப்பில் இருந்து பாகிஸ்தானை நீக்கும் பிரேரணைக்கு இலங்கை ஆதரவு வழங்கவில்லை.

அமைச்சரவையின் தீர்மானத்தின் படியே அங்கு நான் செயற்பட்டேன். பாகிஸ்தானை உடனடியாக பொதுநல நாடுகள் அமைப்பிலிருந்து நீக்காமல் அந்நாடு ஜனநாயகத்திற்குத் திரும்ப கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுத்தோம்.

பாகிஸ்தானை இடைநிறுத்துவது தொடர்பாக செப்ரெம்பர் மாதம் நியூயோர்க்கில் பேசப்பட்டது. அப்போது நான் இலங்கையின் இதே நிலைப்பாட்டை முன்வைத்துப் பாகிஸ்தானுக்கு ஆதரவாக மூன்று மணி நேரம் பேசினேன்.

அதேபோல் நவம்பர் மாதம் லண்டனில் இது தொடர்பாக ஆராயப்பட்டது. அப்போதும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக ஆறு மணிநேரம் பேசினேன்.

அச்சமயம் பாகிஸ்தானுக்கு 10 நாட்கள் மட்டும் அவகாசம் வழங்கப்பட்டது.

இங்கு சொல்லப்படுவதுபோல இந்தியாவுக்குப் பயந்து நாம் பாகிஸ்தானை எதிர்த்தோம் என்பது தவறு.

பொதுநல நாடுகள் அமைப்பின் மாநாட்டில் 'ஒரு கல்லில் இரு மாங்காய்களைப் பெற்றுவதுபோல்' இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஆதரவாகவே செயற்பட்டோம்.

பொதுநல நாடுகள் அமைப்பின் தற்போதைய பொதுச் செயலாளரின் பதவிக் காலம் அடுத்த வருடம் முடிவடைகிறது. அந்தப் பதவி இந்தியர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்று நாம் வேண்டுகோள் விடுத்தோம்.

நாம் இந்தியாவுடன் நட்புடனேயே உள்ளோம். கடந்த எட்டு மாதங்களில் நமது இரு நாடுகளுக்கும் இடையில் பத்து உயர்மட்டச் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

அச்சந்திப்புகளில் ஐந்தில் நான் கலந்து கொண்டேன். அதுமாத்திரமின்றி அடுத்த வருடம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை வருகிறார்.

இவரது வருகை எமது நாட்டுக்கும் பல நன்மைகளை ஏற்படுத்தும். எமது உறவு மேலும் மேலும் பலப்படும்.

அதேபோல் பாகிஸ்தானுடனான எமது நட்பும் தொடரும். எந்தச் சந்தர்ப்பத்திலும் பாகிஸ்தானுக்கு எதிராக நாம் செயற்படப்போவதில்லை. - என்றார் அவர்.

(சி)

# வெளிநாட்டமைச்சரை உடனே பதவி நீக்கம் செய்ய வேண்டும்

### சபையில் ஜோன் அமரதுங்க எம்.பி. கோரிக்கை



கொழும்பு, நவ. 29

'பாகிஸ்தானை பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் இருந்து நீக்கும் தீர்மானத்திற்கு இலங்கை வெளிநாட்டமைச்சர் ஆதரவாகச் செயற்பட்டதற்காக அவர் உடனடியாகத் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும் அல்லது ஜனாதிபதி அவரைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும்.''

- இவ்வாறு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

பாகிஸ்தான் எமது தேசிய பாதுகாப்புக்குப் பலதரப்பட்ட ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது. அப்படியானதொரு நாட்டை பொதுநலவாய நாடுகளில் இருந்து அகற்ற எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை வெளிநாட்டமைச்சர் ஆதரவாகச் செயற்பட்டமை மிகத் தவறானது.

இது இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறையில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானை நீக்குவது தொடர்பான தீர்மானத்தை நி[illegible] விடாமல் இலங்கை எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யவில்லை.

தீர்மானத்தை எதிர்க்குமாறு ஜனாதிபதி வெளிநாட்டமைச்சருக்கு உத்தரவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. அப்படியென்றால் வெளிநாட்டமைச்சர் ஏன் இத்தீர்மானத்தை எதிர்க்கவில்லை? அல்லது வெளிநடப்புச் செய்யவில்லை?

ஆனால்,வெளிநாட்டமைச்சர் சொல்கிறார் தனக்கு இது தொடர்பாக தகவல் கிடைக்க வில்லையென்று.

உண்மையில் ஜனாதிபதியின் உத்தரவை வெளிநாட்டமைச்சர் மீறியிருந்தால் ஜனாதிபதி ரோஹித போகொல்லாகமவை வெளிநாட்டமைச்சர் பதவியில் [illegible]வேண்டும் அல்லது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சரவணமுத்து மகேஸ்வரி**

மலர்வு: 15-05-1921

உதிர்வு: 09-12-2006

திதி:
அபரபக்கப் பஞ்சமி
29.11.2007

நற்பண்புக்கோர் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வழிகாட்டிய எம்குலவிளக்கே!
மறையாது உங்கள் நினைவுகள்.

யாகினி பிறிண்டேர்ஸ்,
சாருஜன் ஜுவல்ஸ் சிற்றி,
நாச்சிமார் கோயிலடி. (68418)

நடராசா *(பஞ்சாட்சரம்)*
குடும்பத்தினர்.

## நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலி

15 ஆம் ஆண்டு



அமரர்
**தம்பிப்பிள்ளை வீரசிங்கம்**
மண்ணில் 14.09.1916 விண்ணில் 10.07.1992

3 ஆம் ஆண்டு



திருமதி
**பவளம்மா வீரசிங்கம்**
மண்ணில் 10.08.1925 விண்ணில் 02.12.2004

எமது குடும்பத்தின் குலவிளக்குகளை (29.11.2007) இந்நாளில் நினைவு கூருவதோடு, அவர்களுடைய ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

"கவிகா வாசம்",
3 ஆம் கட்டை, கட்டைப்பிராய். (68408)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 ❖ 03 ❖ 1933

உதிர்வு 31 ❖ 10 ❖ 2007



அமரர்
**பரமு முத்துக்குமாரசாமி**
(ஓய்வு பெற்ற கட்டட மேற்பார்வையாளர், கல்வித் திணைக்களம்)

மாதம் ஒன்று சென்றாலும் மாறாது
உம் நினைவு மீளாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மறைந்தீரோ அப்பா .........

கடந்த 31.10.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறி உதவியவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, அனுதாபமடல், மலர்வளையம், பத்திரிகைகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது இதயம்கனிந்த நன்றிகள்.

30.11.2007 வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

50, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

செபஸ்ரியாம்பிள்ளை லூட்ஸ் அமிர்தநாயகி என்பவருடைய தே.அ.அட்டை (597533659 V), வி.அ.அட்டை என்பன நல்லூருக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தனியார் பஸ்ஸில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் *இல.53, வைமன் வீதி, நல்லூர்* எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (68416)

## தவறிவிட்டது

101/1, அரியாலை என்னும் முகவரியைச் சேர்ந்த விக்னராஜா சாண்டிலியன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய சிறய பாக் கல்வியங்காட்டிற்கும் நாயன்மார்கட்டிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து *'ஊர்மிளா ஸ்ருடியோ', பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு* என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.: 6587 (68287)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை**
**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**

**கல்வியாண்டு 2006/ 2007**

மேற்படி கல்வியாண்டின் முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 05.12.2007 காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 20.01.2008ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

சிரேஷ்ட மாணவர்களுக்கான (2 ஆம், 3ஆம், 4ஆம் வருடம்) மீள்பதிவு பற்றிய மேலதிக விவரங்களை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்.** (சி/54512)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.29

ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையை மேற்பார்வை செய்யவுள்ளோருக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இதில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் வருகை தரவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203)

## வரவு- செலவுத் திட்ட வேலைகளை உரியகாலத்தில் முடிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.29

2007 பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவு திட்டவேலைகள் உரிய காலத்தில் முடிவுறுத்தப்பட்டு அதற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

யாழ்.செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் சகல பிரதேச செயலக, பிரதேசசபை செயலாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவு திட்டத்தின் கீழ் அதிக வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் விரைந்து வேலைத் திட்டங்களைமுடித்து நிதி, பௌதிக அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-95)


## பாராட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.29

கோப்பாய் பரமேஸ்வரி அம்பாள் சேமிப்புக் கழகமும் சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசனுக்கு நாளை வெள்ளிக்கிழமை சூரியோதய நிலைய மண்டபத்தில் வைத்து பாராட்டு நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளன.

திருமதி அ. பேனாட் மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கழகத்தின் புதிய வருட நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (203)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா கந்தசாமி**

மந்துவில் புளியந்திடல் ஸ்ரீகந்தசாமி கோயில் பரிபாலன சபையின் நிர்வாக சபை உறுப்பினரான திருமதி கந்தசாமி செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரான **பொன்னையா கந்தசாமி** அவர்கள் 30.10.2007 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி!*

**பரிபாலசபை,**
மந்துவில் புளியந்திடல் ஸ்ரீகந்தசாமி கோயில், மந்துவில் வடக்கு.

## நாலாம் ஆண்டு நினைவலைகள்

**அமரர் சின்னத்துரை திருநாவுக்கரசு**
(6ஆம் திருவிழா உபயகாரர், பொலிகண்டி கந்தவனம் கோயில்)



அன்னை மடியில் 30-09-1930 பலாலி

கந்தன் காலடியில் 29-11-2003

48 மாதங்கள் சென்றன
ஐயா!
உங்கள் பாசமுகம் எம்
நெஞ்சைவிட்டு நீங்காது!
*ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!*

மனைவி - அன்னமுத்து,
லோகநாதன் (மகன் - கனடா),
தங்கராணி (மருமகள்),
பிரசாந், அனுசாந்,அனுசாந்தி (பேரப்பிள்ளைகள்)

தொண்டைமானாறு வீதி,
அச்சுவேலி. *(சி/54489)*

## 9ஆம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்



மலர்வு 11 10 1985

உதிர்வு 09 03 2007

(68313)

**செல்வி முருகையா மயூரா**
*(முகாமைத்துவப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம் -2007)*

பொன் மயிலே! புதுச்சரமே!
புன்னகையே! புதுமலரே!
புமுகத்தைக் காண்போமா?
புன்னகையை இரசிப்போமா?
ஆசைச் செல்வமே! அன்பு மலரே!
பாசம் மாறாத நேசத்தாமரையே!
கைகள் கூப்புகின்றோம்
கண்மலர்கள் தூவுகின்றோம்
இறைவன் பாதத்தில்
இன்புற்று வாழுமம்மா!

இன்று (29.11.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 11 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அலுகை, அளவெட்டி. *உமது பிரிவால் துயருறும்:* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்**



நந்தாவில், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (27.11.2007) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா- தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் புஸ்பாதேவியின் அன்புத் தாயும் தம்பிநாதனின் மாமியும் யோகலா, முகுந்தன், யோகுணன் (**Electrical Engineer**) , யோகரன் (**Chartered Accountant**), கிருசாந்தி, யோதினி, சதீஸ்குமார் ஆகியோரின் பேர்த்தியும் லக்ஷா, தரங்கினி, அபிஷா, அபிலாஸ் ஆகியோரின் பூட்டியும் செல்லையா, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.11.2007) புதன் கிழமை மு.ப.11 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சு.இராஜேந்திரா,
விமலஸ்தான் ,
இணுவில் மேற்கு,
இணுவில். (68409)

தகவல்:
த.யோகரன் *(பேரன்)*,
No 7Th 46 Th Lane,
Colombo- 06,
T.P.: 0777- 311441.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

## அதிபர் திரு.பொன்னையா நடராசா அவர்களின்

# சேவை நயப்பு விழா - 29.11.2007



**திரு.பொன்னையா நடராசா**

(Spl.Trd.Com. S.L.P.S. - I)

ஆரம்பக் கல்வி:- யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை
இடைநிலைக்கல்வி:- யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
முதல்நியமனம்:- 15.07.1967
ஆசிரிய பயிற்சி:- அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, பலாலி

### சேவை விவரம்

1. பண்/சென்.ஜோசெப் கல்லூரி - ஆசிரியர் 15.07.1967 - 03.01.1968
2. அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி-04.01.1968 - 31.12.1969
3. மன்/எருக்கலம்பிட்டி ம.ம.வி - ஆசிரியர் - 01.01.1970 - 30.04.1972
4. மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி - ஆசிரியர்- 01.05.1972 - 23.01.1977
5. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி - ஆசிரியர் - 24.01.1977 - 31.08.1987
6. யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வர வித்தியாசாலை - ஆசிரியர் - 01.09.1987 - 31.12.1988
7. யா/கனகரத்தினம் ம.ம.வி - ஆசிரியர் - 01.01.1989 - 07.01.1991
8. யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாசாலை - அதிபர் 08.01.1991 - 13.10.1992
9. யா/கனகரத்தினம் ம.ம.வி - பிரதி அதிபர் - 14.10.1992 - 26.01.1994
10. யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை-அதிபர் - 27.01.1994 - 12.11.2007

### ஆசிச்செய்தி



எமது பாடசாலையின் அதிபர் திரு.பொ.நடராஜா அவர்கள் 1994ஆம் ஆண்டிலிருந்து பதின்மூன்று வருட காலமாகத் தமது முயற்சியினாலும் அயராத உழைப்பினாலும் பல்வேறுபட்ட வழிகளில் இப்பாடசாலையை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் சென்றுள்ளார். இவர் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இவ்வூரிற்கும் பல பணிகளை ஆற்றியுள்ளார். இவரது இத்தகைய பணிகளினை ஓய்வுக் காலத்திலும் ஆற்றுவதற்கு இவரும் இவரது குடும்பத்தினரும் பல்லாண்டு காலம் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ சித்தி விநாயகப் பெருமானிடம் பிரார்த்தித்துக்கொண்டு எனது ஆசிகளையும் கூறுகின்றேன்.

*கிரியா தத்துவநிதி பிரம்மஸ்ரீ சு.முரளீதரக்குருக்கள்*
பிரதமகுரு, அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்.

### கல்விக்காக உழைத்தவர்



அதிபர் என்ற வரைவிலக்கணத்தை நிறைவு செய்தவர் அதிபர் திரு.பொ.நடராசா என்றால் மிகையாகாது. யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தை கஷ்டங்கள் மிகுந்த இடப்பெயர்வு, மீளக்குடியமர்வு போன்ற காலங்களில் தவறாது பாடசாலையை வழி நடத்தி மாணவர்களை ஒழுக்கம், கல்வி என்பவற் றில் மேன்மையடைச் செய்தவர். முரண்பாடற்ற ஒரு கல்விச் சமூகத்தை இப்பாடசாலையிற் கட்டியெழுப்பிக் கல்வி அபிவிருத்திக்கு உழைத்த அதிபர் தனது 60ஆவது அகவையில் ஓய்வுபெறுகிறார். அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக இருக்க எனது பிரார்த்தனைகள்.

**வே.தி.செல்வரத்தினம்**
*யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளரும்*
*மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரும்.*

### வாழ்த்துச் செய்தி



யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் கடந்த பதின்மூன்று வருடங்களாக அதிபராகக் கடமைபுரிந்து அவ் வித்தியாலயத்தை மேல்நிலைக்கு உயர்த்தியவர்.

அடிக்கடி நாட்டின் சூழ்நிலை காரணமாக அப்பாடசாலை மோசமாகப் பாதிக்கப்பட்டபோதும் அப்பாதிப்புக்களையெல்லாம் நீக்கி முன்பைவிடச் சகல வழிகளிலும் உயர்த்தியவர். நேர்மையும் கடவுள் பக்தியும்மிக்க கடமை வீரனாகத் திகழ்ந்த திரு.பொன்னையா நடராசா அவர்களின் கடமைக் காலம் யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தின் பொற்காலம் எனலாம். அவரது ஓய்வுகாலம் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

**கே.வி.குணசேகரம்**
*கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலகம், நல்லூர்.*

### அவரது அனுபவமும் வழிகாட்டலும் தொடர்ந்து கிடைக்கவேண்டும்



பொன்னையா நடராசா அவர்கள் வணிகக்கல்வி ஆசிரியராக இணைந்து மிகக்குறுகிய காலத்திலே இலங்கை அதிபர்கள் சேவைப் போட்டிப் பரீட்சைமூலம் தெரிவுசெய்யப்பட்டு தற்போது அதிபர் தரம் 1இல் நல்லூர்க் கல்விக் கோட்டத்தின் கீழ் அலங்கரிக்கும் அதிபர்கள் வரிசையில் யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தை அலங்கரித்து நிற்கும் அற்புதமனிதராகக் காண்கிறேன். நிர்வாக அனுபவத் தேர்ச்சியிலும் அன்போடு யாவரையும் அளவளாவி வாஞ்சையுற நேசிப்பதிலும், அயராது மேற்கொண்ட நல்முயற்சிகளையும் இன்று நாம் நினைத்துப் பார்க்கின்றவேளையில் அவரது சேவை நிறைவால் பெறும் ஓய்வானது எமது நல்லூர்க் கல்விக் கோட்டத்தின் முதுபெரும் தலைமைத்துவத்திற்கும் கல்விப் பெரும் புலத்திற்கும் தாக்கத்தை உண்டுபண்ணும் நிகழ்வாகவே அமைந்துள்ளது. ஓய்வுக்காலம் அமைதியும், நிறைவும், ஆரோக்கியம் மிக்கதுவுமாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வே.ஞானகாந்தன்,**
*தலைவர், அதிபர்கள் சங்கம், நல்லூர்க் கல்விக்கோட்டம்.*

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



மானிட வாழ்வின் அதியுன்னதப்பணி இறைபணி ஆகும். அதற்கு ஒரு படி மேலாக திரு.பொ.நடராசா அதிபர் அவர்கள் "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற முது மொழிக்கிணங்க மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகத் தனது ஆயுட் காலத்தின் பெரும் பகுதியை செலவிட்டு மாணவ சமுதாயத்திற்குப் பெரும்பணியாற்றியுள்ளார் என்றால் அது மிகையாகாது.

மேலும் எமது அதிபர் அவர்கள் பேச இனியவர், பழக இனியவர், மிகவும் தன்னடக்கமுடையவர். ஒழுக்கத்துடன்கூடிய கல்வியை மாணவ சமுதாயத்திற்கு வழங்கிய பெருமைக்குரியவர் ஆவார்.

*சலனமற்ற சமூகமிதில் - நாம்*
*பண்புடனே பழகிடவே*
*பலவழிகள் சுட்டி நிற்கும்*
*அனுபவத்தின் சிகரம் இவர்.*
*அன்பான அதிபர் இவர்*
*பல்லாண்டு வாழ்ந்திடவே*
*ஆண்டவரே ஆசிர்வதியும்.*

**திருமதி யேசுதாசன் ஜாமினி,**
*செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.*

### அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அன்புள்ளம் கொண்ட பண்பாளன்



யாழ்.அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை அதிபராக ஏறத்தாழ 14 வருடங்கள் தொடர்ந்து சேவையாற்றி 12.11.2007 அன்று ஓய்வுபெற்ற திரு.பொன்னையா நடராசா அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதில் எமது சங்கம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் அப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பெரும் பங்காற்றமுடியும் என்ற தனது நம்பிக்கைக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் பல வருடங்களாகச் செயலிழந்து இருந்த பழைய மாணவர் சங்கத்தைப் புனரமைப்பதில் வெற்றி கண்டவர். சங்கத்தின் போசகர்களில் ஒருவராக விளங்கிய அதிபர் அவர்கள் எம்முடன் நெருங்கிய தொடர்பினைப் பேணியதுடன் எமது சங்கத்தின் பங்களிப்புடன் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் அங்கங்களாக அமையக்கூடிய கணனிக்கல்வி அபிவிருத்தி, கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு, சத்துணவு வழங்குவதற்கான அடிப்படை வசதிகள் உருவாக்குதல் போன்ற திட்டங்களைச் செயற்படுத்துவதில் வெற்றிகண்டார்.

எமது பாடசாலையின் பழைய மாணவனாக விளங்கிய அதிபர் அவர்கள் பாடசாலையின் பௌதீக வளங்களைப் பெருக்குவதிலும் மாணவர்களின் கல்விப் பெறுபேறுகளை விருத்தி செய்வதிலும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டமை நாம் அனைவரும் அறிந்ததே. பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டடம், நூலகம் போன்றவை 2000ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின் நிர்மாணிக்கப்பட்டவை. 2007ஆம் ஆண்டு வெளிவந்த கல்விப் பொதுதராதரச் சான்றிதழ் (சாதாரணம்) மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் இப்பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். அம்மாணவர்களை எமது சங்கம் பாராட்டிக் கௌரவித்துள்ளமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது எனக் கருதுகின்றேன்.

தனது சேவைக்காலத்தில் அர்ப்பணிப்புடனும் ஈடுபாட்டுடனும் செயற்பட்டு (1995 மற்றும் 2000ஆம் ஆண்டுகளில் இடம்பெயர்ந்து இயங்கிய நிலையிலும்) பாடசாலையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை தனது இலக்காகக் கொண்டு செயற்பட்டு தனது 60ஆவது அகவையில் ஓய்வுபெற்றுள்ள அதிபர் திரு.பொன்னையா நடராசா அவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பது சாலவும் பொருத்தமானது.

அதிபர் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் சிறப்புற வாழ்ந்திட விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

**S.T.பத்மநாதன்**
*தலைவர், பழைய மாணவர் சங்கம்,*
*யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை (செயற்குழு சார்பில்).*

### செவ்வனே கடமை புரிந்த உத்தமர்



உயர்திரு.பொன்னையா நடராசா அவர்கள் எமது பாடசாலையில் கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் அதிபராக அரும்பணியாற்றி தமது அறுபதாவது அகவையில் ஓய்வுபெற்றுள்ளார். அவர் இப்பாடசாலையின் பழைய மாணவரும் ஆவார். நேர்மையான உள்ளம் படைத்தவர். கடமையுணர்வுமிக்கவர். எந்தச் செயலையும் மிக எளிமையாக கையாண்டு அதனை முன்னெடுத்துச் செல்பவர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்ட உத்தமர். அவரின் அர்ப்பணிப் பால் இப்பாடசாலை ஒரு சிறந்த பாடசாலையாக திகழ்கிறது. அவர் செய் தொழிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டாலும் அவரின் பணி எமது பாடசாலை நிர்வாகத்திற்கும் மாணவ சமுதாயத்திற்கும் மேன்மேலும் பயன்பெற வேண்டும். அவரும் அவர்தம் குடும்பத்தினரும் மேன்மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டுகாலம் வாழவேண்டும் என்று இறைவனை வேண்டி அவரை வாழ்த்துகிறேன்.

*சீ.சிவநேசன்*
*அதிபர், யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.*

### செய்யும் தொழிலே தெய்வம் எனப் போற்றுபவர்



மேன்மையான ஆசிரியர் பணியினை மேற்கொண்ட திரு.பொ.நடராசா அவர்கள் எமது பாடசாலையில் பதினான்கு ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றி 12.11.2007 இல் ஓய்வுபெற்றார்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சி என்பது அதிபரின் ஆளுமையில் தங்கியுள்ளது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர். அன்னார் அதிபராகப் பொறுப்பேற்ற குறுகிய காலத்திற்குள்ளேயே நாட்டுச் சூழ்நிலை காரணமாகப் பல்வேறு நெருக்கடிகளையும், இடப்பெயர்வினையும் எதிர்கொள்ள நேரிட்டது. அத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் சிறிதும் மனம் தளராது செயற்பட்டமை அவரின் ஆளுமைத் திறனுக்கோர் எடுத்துக்காட்டாகும்.

சேதமுற்றிருந்த எமது பாடசாலைக் கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்தும், பல புதிய உட்கட்டுமானப் பணிகளை மேற்கொண்டும், பௌதீக வளங்களைப் பெருக்கிப் பாடசாலைக்கு புதுப்பொலிவினையூட்டிய அவரின் பணிகள் போற்றத்தக்கவை. மிகவும் பின்தங்கிய கல்வி, சமூக, பொருளாதார சூழலிலிருந்து வரும் மாணவர்களையும் அன்போடு அரவணைத்து ஏற்று அவர்களையும் ஒரு நல்ல மனிதராக்குவதே பெரும் புண்ணியமாகும் என்ற நன்மனப்பாங்கோடு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆன்ம ஈடுபாடும் இறைபக்தியும் கொண்டதாக அவரின் ஓய்வு காலம் அமையவும் ஆரோக்கியமும் சாந்தியும் நிறைந்ததாக விளங்கவும் எல்லாம் வல்ல சித்திவிநாயகர் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி சா.யோகதாசன்,
*உபஅதிபர்.*

### கடமைக்கு இலக்கணமானவர்



சைவமும் தமிழும் நிலைத்திருக்கும் தொன்மை ஊராகிய அரியாலையிலே 1947ஆம் ஆண்டில் அவதரித்த திருவாளர் பொன்னையா நடராசா அவர்கள் தனது 20ஆவது வயதில் ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக்கொண்டார். அயராத முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் தனது கடமையை ஆற்றிவரும் நாளில் அதிபராகப் பதவியுயர்வு பெற்றார். இவர் தனது கடமையை கண்ணியம், கட்டுப்பாட்டுடன் ஆற்றினார். இதனால் சக அதிபர்களாலும் கல்வித்திணைக்களத்தினாலும் பாராட்டப்பட்டு வந்தார். இவருடைய காலத்தில் எமது பாடசாலை சகல பௌதீக வளங்களும் பெற்று வந்ததுடன் மாணவர்களின் கல்வி அடைவு மட்டமும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. தனது 60ஆவது வயதில் ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் சித்திவிநாயகர் துணைகொண்டு நீடூழி காலம் சீரோடும் சிறப்போடும் வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி பி.இராசலிங்கம்
*தலைவர், ஆசிரியர் நலன்புரிக் கழகம்,*
*அரியாலை ஸ்ரீபார்வதி வித்.*

### பணி செய்யும் பண்பாளர்

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கு இணங்க தமது கடமையை செம்மையாகச் செய்து தனக்கென ஓரிடத்தைப் பிடித்தவர் திரு.பொ.நடராசா அவர்கள். பாடசாலைப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி மாணவர்களாகிய எம்முடன் இன்முகத்துடன் அணுகி எமக்கு பிரச்சினைகள் ஏற்படும்போது சுமூகமாகத் தீர்த்து வைப்பவர். உண்மை, பொறுமை என்பவற்றை அணிகலன்களாகக் கொண்டவர். இவர் ஓய்வுபெற்றுச் சென்ற பின்பும் எமது பாடசாலைக்கும், சமூகத்திற்கும் துணைபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றதோடு இவர் இறைவன் அருளால் நீடூழி காலம் வாழ மாணவத் தலைவர்களாகிய நாம் வாழ்த்துகின்றோம்.

மாணவர் முதல்வர் சபை
*யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.*


## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**றாஜீவ்**
*நவாலி வீதி, ஆனைக்கோட்டை.* (68158)


## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.29

- தீவகம் தெற்கு பிரதேச சபை புங்குடுதீவு உப அலுவலக முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. பொறுப்பதிகாரி என்.கே.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வேலணை பிரதேச சபை செயலாளர் கை. மகேந்திரலிங்கமும் சிறப்புவிருந்தினர்களாக சமூகசேவையாளர் திருமதி கணேஷ் மங்கையர்க்கரசி, தீவக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.விக்கினேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக தெய்வக் குழந்தைகள் இல்ல இயக்குநர் ஜே.பூராசா, ஆரம்பக்கல்வி இணைப்பாறிய ஆலோசகர் த. தவராசா, புங்குடு தீவு கிராம அலுவலர் ஆர். ரமேஷ் ஆகியோரும் கலந்துகொள்வர்.


## இதோ!

இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச் செய்து, பூரிக்கச் செய்வதற்கும் விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும் நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!
100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
*இல.288, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி/54292) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)


## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

**சிவச்சந்திரன்- மதிவதனி**
**தம்பதியரின் செல்வப்**
**புதல்வன் தாருஜன்**

இரண்டாவது பிறந்ததினத்தை இன்று (29.11.2007) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, பெரிய அம்மப்பா, பெரிய அம்மம்மா, மாலினிச் சித்தி, நாதன் பெரியப்பா, புஸ்பா பெரியம்மா, கனகநாதன் பாட்டா, சின்னத்தம்பிப் பாட்டா, ரஞ்சன்மாமா குடும்பத்தவர், அப்பன் மாமா குடும்பத்தவர், சூட்டி மாமா, சபேசன் மாமா, தேனுகா ரீச்சர், அனுசா, வனிதா, அக்காமார், அப்பப்பா, அப்பம்மா, றதன் மாமா, நந்தினி மாமி, கவிச் சித்தப்பா, செல்வன் சித்தப்பா, கனகலட்சுமி, நாகேஸ்வரி, பூட்டிமார், கௌதமன், லக்சன், ஜனனி, மச்சாள்மார், உற்றார், உறவினர்கள் அனைவரும் சுன்னாகம் தெற்கு பூதவராயர் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

*தகவல்:*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*
**குடும்பத்தினர்.**




(68404)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த நாடுகளில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகள்



லண்டனில் இடம்பெற்ற நிகழ்வில் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் ஈகச் சுடர் ஏற்றியபோது....



டென்மார்க்கில் இடம்பெற்ற நிகழ்வில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் சகோதரர் பரமு மகேந்திரன் ஈகச்சுடர் ஏற்றியபோது...



தென்னாபிரிகாவில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஈகச் சுடர் ஏற்றியபோது...



கனடாவில் இடம்பெற்ற நிகழ்வில் திரைப்பட இயக்குநர் சீமான் மலரஞ்சலி செலுத்தியபோது...



சுவிஸில் இடம்பெற்ற நிகழ்வில் மாவீரர்களின் கல்லறைகளில் மக்கள் தீபங்களை ஏற்றியபோது...




பிரான்ஸில் இடம்பெற்ற நிகழ்வில் விசேடமாக அமைக்கப்பட்ட துயிலும் இல்லத்தில் மக்கள் அஞ்சலி செய்தபோது...

## வெடிபொருள் கடத்தல்; இரு பெண்கள் கைது!

இராமநாதபுரம்,நவ.29

இலங்கைக்கு வெடிபொருள்களைக் கடத்திச் செல்லமுயன்றனர் என சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இராமேஸ்வரத்தையடுத்த செம்மமடம் என்ற இடத்திலிருந்து வெடிமருந்துகளை இரண்டு பெண்கள் கடத்திச்செல்லவிருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, பொலிஸார் இருவரையும் தடுக்க முயன்றனர் என்றும், அவர்கள் வெடிபொருள்களை விட்டு விட்டுத் தப்பியோட முயன்றனர் என்றும் இராமேஸ்வரம் மாவட்டத் துணை எஸ்.பி. அமலாபாய் தகவல் தெரிவித்தார்.

பின்னர் பொலிஸார் துரத்திச் சென்று காவேரியம்மாள் மற்றும் ஆனந்தம்மாள் ஆகிய இருவரையும் கைதுசெய்தனர். அவர்களிடமிருந்து 3 ஆயிரத்து 300 டெட்டனேட்டர்கள், 39 ஜெலட்டின் குச்சிகள் மற்றும் வயர்கள் என்பவை பறிமுதல் செய்யப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார்.

# ஊடக அடக்குமுறைகள் குறித்து நாடெங்கும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த முயற்சி

கொழும்பு,நவ.29

பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்கு ஊடகங்கள் மீதான அடக்குமுறைகள் பற்றி நாடுமுழுவதிலும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களை நடத்துபவர்களும் ஊடகங்களில் பணியாற்றும் ஆசிரியர்களும் மற்றும் அனைத்து ஊடகவியலாளர்களும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தில் பத்திரிகை வெளியீட்டாளர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் கடந்தசெவ்வாய் கிழமை கலந்துரையாடியே மேற்படி முடிவை மேற்கொண்டனர்.

இந்தத் தீர்மானத்தைச் சரிவர நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனமும் எடிட்டர்ஸ் கில்டும் (Editors Guild) முழு ஆதரவு வழங்கும்.

முதற்படியாக அனைத்து ஊடகவியலாளர்களும் தமக்குள் உள்ள சிறுசிறு வேற்றுமைகளைத் தூக்கி எறிந்துவிட்டு ஒன்றிணைந்து ஒரே கொடியின் கீழ் செயற்படுவதற்கு முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அது ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. அன்றைய தினம் இங்கே ஊடக அடக்குமுறைகளை எதிர்த்து மிகப்பெரிய அளவில் ஓர் அணிவகுப்பையோ அல்லது வேறு விதமான ஆர்ப்பாட்டத்தையோ நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் டிசம்பர் 3 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதிவரை வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகளில் ஊடக அடக்குமுறைகளுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டும். பத்திரிகைகளில் இதற்கென இடம் ஒதுக்க வேண்டும். 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அரைப்பக்கம், 10 ஆம் திகதி எல்லாப் பத்திரிகைகளிலும் முழுப்பக்கம் என்ற ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சுவரொட்டி இயக்கத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சமய குருமார்களுடன் கலந்து பேசி அவர்களின் ஒத்துழைப்பைப் பெறும் நிகழ்ச்சித்திட்டமும் வகுக்கப்பட்டிருக்கிறது.

டிசம்பர் 8ஆம் திகதி பிரதிநிதித்துவ ஊடகக் குழு ஒன்று கூடி நிலைமை பற்றி ஆராயும். அதைத் தொடர்ந்து 9ஆம் திகதி அனைத்து ஊடகங்களையும் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளும் ஊடக மாநாடு ஒன்று நடத்தப்படும். அதில் குழுவின் கூட்டறிக்கை வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தவிர அண்மைக்காலத்தில் இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் எதிராக அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுவரும் கொலைகள், தாக்குதல்கள், இன்னல்கள் தொடர்பாகத் துரித விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரி பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பப்படுகிறது.

(சி)

## பலன் ஏற்பட உள்நோக்கு வளரவேண்டும்

நாம் ஆன்மீக முயற்சிகள் என்னென்ன செய்கிறோம்? நாம் ஆன்மீக நூல்கள் எவற்றைப் படிக்கிறோம்? ஆன்மீகப் பெரியார்கள் யார் யாரைச் சந்திக்கின்றோம்? இவை யாவற்றிலும் என்ன பயன்? ஒரு பயனுமில்லை. நாளுக்கு நாள் நமது புறநோக்கு பெருகிக் கொண்டே செல்கிறது. உள்ளே நோக்குவது வளரவில்லை. அதனாலேயே இவற்றால் பலன் ஒன்றும் ஏற்படவில்லை.

தகுந்த பலன் ஏற்பட வேண்டுமானால் அனுபவங்களை ஆதாரமாகக் கொள்ள வேண்டும். அனுபவம் இதயத்திலிருந்து கிடைப்பதே தவிர வெளியுலகிலிருந்து கிடைப்பதல்ல. அனுபவங்களுக்காகப் போராடத் தேவையில்லை. பரிசோதனை செய்யவேண்டாம். விஞ்ஞான உலகில் பரிசோதனை விளைவுகளைத் தரும். அத்யாத்ம உலகில் அனுபவம் மட்டுமே பரிசோதனைகள் அல்ல.

தேகம் என்பது பாத்திரம். தெய்வதத்துவம் என்பது சர்க்கரை. கண்ணால் அதைப் பார்க்க முடியாது. கையால் அதை எடுக்க முடியாது. ஆனந்தத்தை அனுபவிக்கும் போது அதை நீ அறிந்து கொள்வாய். தெய்வத்துவம் எங்கும் பரவியுள்ளது. நெருப்பின் மேல் சாம்பல் படர்த்திருப்பதேன்.? நாம் நெருப்பை அலட்சியம் செய்து விட்டோம். சாம்பல் நெருப்பிலிருந்துதான் வந்தது. நெருப்பையே மூடிவிட்டது. சாம்பலை ஊதினால் நெருப்பு கனியும்.

ஞானமாகிய நெருப்பு உங்களுக்குள் இருக்கிறது. அதை நீங்கள் அலட்சியம் செய்யாதீர்கள். மாயையாகிய சாம்பல் அதன் மேல் படர்ந்து இருக்கிறது. ஆகையால் நீங்கள் நெருப்பைக் காணவில்லை. ஞானத்தைப் புரிந்துகொள்ளவில்லை. நீங்கள் துறவு மனப்பான்மையால் சாம்பலை ஊதுங்கள் நெருப்பைக் காண்பீர்கள்.

நெருப்பு முன்னமேயே இருந்தது போல தெய்வதத்துவமும் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது. ஒவ்வொருவருள்ளும் ஆத்மாவாகிய நெருப்பு இருக்கிறது.



சாயி சிந்தனை

## விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்குதல்; உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

சென்னை,நவ.29

இந்தியாவில் தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ ஆதரவு தெரிவிக்கும் நபர்களுக்கு எதிராக மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

மூப்பனார் பேரவைத் தலைவர் எல்.கே. வெங்கட் என்ற உடல் ஊனமுற்ற ஒருவரே பொதுநல நோக்கிலான இந்த மனுவை நேற்றுமுன்தினம் தாக்கல்செய்தார் எனத் தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

'விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த இயக்கத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு தெரிவித்து பொதுக் கூட்டங்கள் போன்றவை நடத்தப்படுகின்றன.

அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மறைவிற்கு அஞ்சலி தெரிவித்து தமிழகத்தில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பேரணி செல்ல முயன்றபோது வைகோ உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டனர். ஆனால், அந்த இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

மத்திய அரசின் உத்தரவை அமுல்செய்வது மாநில அரசின் கடமை. எனவே, விடுதலைப் புலிகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தெரிவித்து பொதுக் கூட்டம் நடத்துபவர்கள், சுவரொட்டிகள் ஒட்டுபவர்கள், கட்டுரை, கவிதை எழுதுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடவேண்டும். மேலும், இந்த இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து பொதுக்கூட்டம் நடத்த அனுமதியளிக்கப்படக்கூடாது என உத்தரவிடவேண்டும் - இவ்வாறு தனது மனுவில் வெங்கட் குறிப்பிட்டுள்ளார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# விபரீத விளைவுகளுக்கு சர்வதேசமும் பொறுப்பு

மாவீரர் தினத்தை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய உரையும் -

அந்த மாவீரர் தினத்தில் வன்னி மீது இலங்கைப் படைகள் பல்வேறு முனைகளில் நடத்திய தாக்குதல்களில் 22க்கும் அதிகமான அப்பாவிகள் உயிரிழக்க, டசினிற்கும் அதிகமானோர் காயமடைந்தமையும் -

புலிகளின் தலைவர் பிரபாகரனை விரைவில் கொன்றொழிப்போம் என இலங்கை அரசின் பாதுகாப்புத் துறையில் அதி சக்தி வாய்ந்தவரான பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ சூளுரைத்திருக்கின்றமை பற்றிய செய்தி வெளியாகியமையும் -

ஏறத்தாழ ஒரே சமயத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இலங்கைத் தீவின் நிலைமை மிக மோசமான விபரீத கட்டத்துக்குள் நுழைந்து கொண்டிருப்பதை உய்த்துணர முடியும்.

இலங்கை விவகாரம் தொடர்பாக சர்வதேச ரீதியில் ஆச்சரியத்துடன் கவனிக்கப்பட்ட ஓர் விடயத்தை இப்பத்தியில் அண்மைக் காலங்களில் நாம் மேலோட்டமாகக் கோடி காட்டி வந்தோம்.

சர்வதேச ரீதியாக மஹிந்த அரசினதும், அதன் படைகளினதும், அவற்றின் கீழ் இயங்கும் துணைப் படைகளினதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளும் கண்டனங்களும் சர்வதேச அமைப்புகள் ரீதியாகத் தீவிரமடைந்து வலுப்பெற்று வர, இவ்விடயத்தில் புலிகள் பெயர் சற்று மேம்பட்டு வருவதையே நாம் சாடைமாடை யாக இப்பத்தியில் தொட்டுக்காட்டியிருந்தோம். சர்வதேச சமூகமும் இதை ஆச்சரியத்துடன் பார்த்து நிற்கின்றது என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அது உண்மைதான். நீதியாக - நியாயமாக - நடப்பதன் மூலம் சர்வதேச சமூகத்தின் தார்மீக ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை நம்பிக்கையோடு எதிர்பார்த்துத் தங்கள் செயற்பாடுகளை அண்மைக் காலத்தில் ஒழுங்குபடுத்தி, நேர்சீராக்குவதில் புலிகள் அதிக சிரத்தையும் கவனமும் கரிசனையும் காட்டி வந்தனர்.

ஆனால் இதற்கு ஆக்கபூர்வமான பிரதிபலிப்பைக் காட்டி, புலிகளை மேலும் ஊக்கப்படுத்துவதில் சர்வதேச சமூகம் தவறிவிட்டது என்றே தோன்றுகின்றது.

கிழக்குத் திமோர், மொண்ரி நிக்ரோ, கொசோவோ போன்றவற்றின் விடயங்களில் தர்மத்துடன் செயற்பட்ட சர்வதேசநாடுகள் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையில் திருப்தியாக நடந்துகொள்ளவில்லை என்றும், இதனால் எம் மக்கள் இந்த சர்வதேச நாடுகள் மீது வைத்திருந்த நம்பிக்கை தகர்ந்து போய்விட்டது என்றும், இந்த நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டில் கேள்விக்குறி எழுந்திருக்கின்றது என்றும் தலைவர் பிரபாகரன் விசனத்தோடு விவரிப்பதும் -

அந்த ஆதங்கமே இந்த வருட மாவீரர் தின உரையின் மையப்பொருளாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதும் -

இந்த நிலைமையையே எடுத்துக்காட்டுகின்றன.

சர்வதேசத்துக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டு விரல் தமிழர் தரப்பில் இருந்து எச்சமயத்தில் நீளுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழ்ச்செல்வன் உயிரிழக்கக் காரணமான விமானக் குண்டு வீச்சால் ருசி கண்டுவிட்ட கொழும்பு, அதையே தன்னுடைய பிரதான தாக்குதல் தந்திரோபாயமாகப் பயன்படுத்தப் போகின்றது என்பது அதன் அண்மைக்கால செயற்பாட்டில் இருந்தும், பாதுகாப்புச் செயலாளரின் செருக்குமிக்க பேட்டியிலிருந்தும் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

நேற்று முன்தினம் - மாவீரர் தினத்தன்று மட்டும் - இத்தகைய விமானக்குண்டுவீச்சு மற்றும் ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர்த் தாக்குதல்களில் இருபதுக்கும் அதிகமான சிவிலியன்கள் பலியாகியிருக்கின்றார்கள்.

ஒருபுறம் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் சர்வதேசம் நீதியாக - நடுநிலையாக - செயற்படவில்லை என்ற விசனமும், ஆதங்கமும் வன்னியிலிருந்து சூடாகவே வெளிப்படுகின்றன.

மறுபுறம், தமிழர் தேசம் மீதான கண்மூடித்தனமான விமானக்குண்டுவீச்சு மற்றும் கிளைமோர்த் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுகின்றனர்; காவு கொள்ளப்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளை ஏற்கனவே பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிட்டுச் சித்திரித்த சர்வதேசம், இப்போக்கைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கின்றது.

இவை எத்தகைய விபரீதத்துக்கு வழிப்படுத்தும்?

இலங்கை இனப்போரின் போக்கை ஆழமாக அவதானித்து வருகின்றவர்களுக்கு இப்போக்கின் விளைவு பேரவலம் தரும் மோசத்தை உருவாக்கும் என்ற அச்ச உணர்வையே ஏற்படுத்துகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இலங்கை விமானப்படை நடத்திய தாக்குதலில் அப்பாவித் தமிழர்கள் நால்வர் கொல்லப்பட்டமையும், அடுத்தநாள் அநுராதபுர எல்லைப் புறப் பிரதேசமான மாவிலாச்சியவில் நான்கு அப்பாவி சிங்கள விவசாயிகள் கொல்லப்பட்டமையும் இனி நிகழப்போகும் அந்த விபரீதங் களுக்கான கட்டியமாக இருக்குமோ என்று எவரையும் எண்ண வைப்பதாகும்.

இவ்வாறான பழிக்குப்பழி வாங்கும் தாக்குதல் போக்குக்கு அப்பாவிகள் இலக்காகும் - இரையாகும் - கொடூரம் இலங்கைத் தீவில் தீவிரம் பெறுமானால், இவ்விடயத்தில் பொறுப்புடனும், நீதியுடனும், நடுநிலையுடனும் செயற்படத் தவறித் தவறிழைத்த சர்வதேசமும் அக்குற்றத்துக்குப் பெரும் பொறுப்பேற்கவேண்டி நேருவது தவிர்க்க முடியாததாகும்.

# கிளிநொச்சி விமானக்குண்டுவீச்சுக் குறி
# நாடாளுமன்றில் அறிக்கை வெளியிடவும் எதிர்

## மாவையின் கோரிக்கைக்கு சபாநாயகர் இன்று முடிவு வழங்குவா

கொழும்பு, நவ. 29

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை விமானப்படையினர் கிளிநொச்சியில் நடத்திய விமானக்குண்டுவீச்சுத் தாக்குதல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் அனுமதியுடன் அறிக்கை ஒன்றை முன்வைக்க முனைந்தபோது ஜே.வி.பி. மற்றும் அரசுத் தரப்பினர் கடும் ஆட்சேபனை கிளப்பி, அந்த அறிக்கையை வெளியிட முடியாது தடை செய்தனர்.

அந்த அறிக்கையைத் தாம் படித்துப் பார்த்துவிட்டு அதை வெளியிடுவது குறித்து இன்று (வியாழனன்று) தீர்ப்பு வழங்குவார் என சபாநாயகர் அறிவிக்கும் நிலைக்கு விவகாரம் சென்றது.

நேற்று சபை கூடியதும், மேற்படி விமானக்குண்டு வீச்சுச் சம்பவம் தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை சபாநாயகரின்முன் அனுமதியுடன்மாவை சேனாதிராஜா எம்.பி. வாசிக்கத் தொடங்கினார்.

ஓரிரு வசனங்கள் மாத்திரம் வாசிக்கப்பட்ட நிலையில், திடீரென எழுந்த விமல் வீரவன்ஸ இவ்வறிக்கை அரசமைப்புக்கு முரணானது என்றும், எம்.பிக்கள் இங்கு எடுத்துக் கொண்ட சத்தியப்பிரமாணத்திற்கிணங்க இக்கூற்றை இங்கு வெளியிட அனுமதி வழங்க முடியாது என்றும் ஆட்சேபம் கிளப்பினார்.

'புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கிளிநொச்சி' என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதால் இது புலிகளுக்கு ஆதரவான-அரசமைப்புக்கு எதிரான - கூற்று என்றும் இதை வெளியிட அனுமதிக்க முடியாது என்றும் வீரவன்ஸ மேலும் கூறினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், "ஒரு குறிப்பிட்ட மக்களின் பிரச்சினை தொடர்பாக இங்கு கூற்றுக்கள் முன்வைக்க வாய்ப்பு வழங்குவது நியாயம்" - என்று குறிப்பிட்டார்.

ஆனால், இது புலிகளுக்கு ஆதரவான கூற்று என்று வீரவன்ஸ வாதிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் வீரவன்ஸவுடன் கைகோத்து அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும், நிமால் சிறிபால டி சில்வாவும் கருத்துகளை முன்வைத்தனர்.

அவ்வறிக்கையில் உள்ள - அரசமைப்புக்கு முரணான - வாசகங்கள் பற்றி ஆராயாமல் இவ்வறிக்கையை வெளியிட சபாநாயகர் மாவை சேனா வுக்கு அனுமதி வழங்கியுள்ளா நிமால் சிறிபால டி சில்வா சபா மீது குற்றம் சுமத்தினார்.

அப்போது தமிழ்த் தே கூட்டமைப்பினர் அடிக்கடி ளுக்கு ஆதரவாக இச்சபையில் யாற்றுகின்றனர் என்றும், இது மைப்புக்கு முரணானது என்றும் நாயகர் கூறினார்.

இது தொடர்பான விவாதம் நீ நேரம் இடம்பெற்றது.

இவ்வறிக்கை தொடர்பாக ஆராய் பார்த்து - அரசமைப்புக்கு முரண விடயங்கள் ஏதும் அதில் காணப்ட டால் அவற்றை நீக்கிவிட்டு அவ்வறிக்கை வியாழனன்று, (இன்று) சமர்ப்பிக் அனுமதி வழங்குவேன் என்று சப நாயகர் கூறினார்.

இவ்வறிக்கை தமிழ் மக்களின் பிரச்சினையை வெளிக்கொண்டு வருகின்றது என்றும், இதை வெளியிட வியாழனன்று சபாநாயகர் அனுமதி வழங்கவேண்டும் என்றும் கூறித் தனது அறிக்கையை வெளியிடாது நிறுத்திக் கொண்டார் மாவை சேனாதிராஜா. (சி)

# 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீதான விமானக் குண்டுவீச்சு ஒரு போர்க் குற்றமே!

## சர்வதேச ஊடக அமைப்புகள் கடும் கண்டனம்

கொழும்பு, நவ. 29

'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீது இலங்கை விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி அதைத் தரைமட்டமாக்கியமையுடன், அங்கு பணியாற்றிய மூன்று ஊழியர்கள் உட்பட ஒன்பது பேரைக் கொன்றதை போர்க்குற்ற நடவடிக்கை என்று பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு கண்டித்திருக்கின்றது.

ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனமும் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

"புலிகளின் குரல் வானொலி, புலிப் புரட்சியாளர்களினால் நடத்தப்படும் ஒருபிரசார வானொலிதான். ஆனால், யுத்த விதிகள் தெளிவானவை. இராணுவக் குண்டு வீச்சுகளும் தாக்குதல்களும் கட்டாயம் இராணுவ இலக்குகளாக மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என அவ்விதிகள் தெளிவாகக் கூறுகின்றன." - என்று எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு என்ற - ஊடகவியலாளர்களின் சுதந்திரத்திற்கான அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

"புலிகளின் குற்றங்களைக் கண்டிப்பதற்கு ஜெனிவாப் பிரகடனங்களை இலங்கை அரசு பயன்படுத்துகின்றது. ஆனால், அதே பிரகடனங்களின் கீழ் சிவிலியன் இடங்களாகக் குறிப்பிட்டு பாதுகாக்கப்பட வேண்டியவை எனக் கூறப்பட்டவை மீது, தானே தாக்குதல் தொடுக்கும்போது அந்தப் பிரகடனங்களை அரசு மறந்துவிடுகின்றது." - என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இத்தாக்குதலில் அந்த நிறுவன ஊழியர்கள் மூவர் உட்பட ஒன்பது சிவிலியன்கள் உயிரிழந்திருக்கின்றார்கள். பத்து சிவிலியன்கள் வரை காயமடைந்திருக்கின்றார்கள் என்பது குறித்தும் அந்த அமைப்பு கவலை தெரிவித்திருப்பதுடன், இந்த விவகாரம் தொடர்பாக ஜெனிவாப் பிரகடன விடயங்களையும் அது பகிரங்கப்படுத்தி சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இச்சம்பவத்தைக் கண்டித்துள்ள ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம், மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

யுத்தப் பிரதேசத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரும் - அவர்கள் பணியாற்றும் ஊடகம் எத்தரப்பின் கருத்தைப் பிரதிபலித்தாலும் - யுத்தத்தில் ஈடுபடாத தரப்பினராகவே கருதப்பட வேண்டும். எந்தக் குறிப்பிட்ட ஊடகத்தின் கருத்தையும் நாம் அங்கீகரிக்கவோ ஏற்கவோ இல்லாவிட்டாலும், 'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீதான தாக்குதலை கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகவும், சர்வதேச சட்டத்தை மீறிய மோசமான செயலாகவுமே கருதுகிறோம். - என்று தெரிவித்துள்ளது. (சி)

## ஓலங்களும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தங்குவதற்கு சந்தர்ப்பமளித்திருப்பது ஏன்? போலி வசதிகள் வழங்குவோரின் பாத்திரத்தை உத்தியோக ரீதியில் ரத்துச் செய்வதற்கு பிரபாகரனால் வழங்கப்பட்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன் படுத்தவேண்டுமல்லவா? உண்மையிலேயே நோயில் வீழ்ந்திருக்கும் தேசத்துரோகப் போர்நிறுத்த ஒப்பந்தத்தை உத்தியோக ரீதியில் ரத்துச் செய்வது பிரிவினைவாத பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் இன்றியமையாத தேவையாகும்.

இதுவரை அரசு எடுக்கத்தவறிய முக்கியமான நடவடிக்கையை எடுப்பதற்கு இச்சந்தர்ப்பத்திலாவது முன்வர வேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தம் ஒழிக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில் தாங்கள் செயற்படுகின்றனர் என வெளிப்படையாகவே பிரபாகரன் கூறியிருக்கும்போது, அதை உத்தியோகபூர்வ ரீதியில் ஒழித்துக் கட்டும் பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கிறது. அந்தக் கடமையை அரசு இப்போது செய்ய வேண்டும்- என்றார். (சி)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 14 | வெள்ளிக்கிழமை 30.11.2007 |
| திதி : சஷ்டி | மு.ப. 11.33 |
| நட்சத்திரம் : | ஆயிலியம் முன்னிரவு 07.53 |
| சுபநேரம் | : 06.14 - 07.44 |
| ராகுகாலம் | : 10.44 - 12.14 |

## நாட்டின் எப்பகுதியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தகால வரலாறு எமக்கு நல்ல பாடம். இந்த விடயத்தில் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருப்பதன் மூலமே புலிகளின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

இந்த நாட்டு மக்களின் உயிர்களைக் காப்பாற்றவும் சொத்துகளுக்கு அழிவு ஏற்படுவதைத் தடுக்கவும் மக்கள் ஓய்வெடுப்பதைத் தவிர்த்து விழிப்பாக இருக்கவேண்டும்.

பாதுகாப்புப் பிரிவினர் உஷாராக - விழிப்பாக - இருந்ததன் காரணமாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உயிர் அதிஷ்டவசமாகக் காப்பாற்றப்பட்டது.

அமைச்சர் டக்ளஸைக் கொலை செய்யப் புலிகள் பல தடவைகள் முயற்சி எடுத்ததும் அவை தோல்வியில் முடிந்ததும் தெரிந்ததே.

புலிகள் அவர்களின் தமிழ்த் தலைவர்களை - தமிழ் அப்பாவிகளை - புத்திஜீவிகளை - மாணவர்களை - கொன்று குவித்து வருகின்றமை புதிய விடயமல்ல.

புலிகள் முதலில் தமது இன மக்களான தமிழர்களையே கொன்று குவிக்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும்.

நாம் என்றும் புலிகளுடன் பேச்சு நடத்தத் தயாராகவே இருக்கின்றோம்.

பிரபாகரனின் மாவீரர் தின உரை தொடர்பாக இலங்கையில் உள்ள சர்வதேச சமூகத்தில் கருத்துகளைக் கேட்டறிந்தேன்.

அவரது உரை தமிழர்களின் நலன்கள் பற்றியதாக இருக்கவில்லை என்றும், அது வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களால் தயாரிக்கப்பட்டது என்றும் அவர்கள் என்னிடம் கூறினர். அத்தோடு இவ்வுரை முற்று முழுதாக சர்வதேச சமூகத்திற்காக மாத்திரமே தயாரிக்கப்பட்டது என்றும் அவர்கள் கூறினர்.

இது தொடர்பாக நான் மேலும் கருத்துக் கூறவிரும்பவில்லை. என்ன நடை கின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

### தமிழர்களும் இந்நாட்டு மக்களே

இந்நாட்டுத் தமிழ் மக்களை நாம் வேறு கண்கொண்டு பார்க்கவில்லை. அவர்களும் இந்நாட்டு மக்கள்தான்.

நாம் விடுவிக்கப்பட்ட கிழக்கை அபிவிருத்தி செய்வதுபோல், வடக்கையும் அபிவிருத்தி செய்கிறோம். வன்னியில் இருந்து நெல் போன்ற உற்பத்திகளை நியாயமான விலைக்குக் கொள்வனவு செய்து வன்னித் தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பப் பாடுபட்டு வருகிறோம்.

சமாதானம் மீது தமிழ் மக்களின் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புகிறோம்.

நாம் தொடர்ந்தும் சமாதானத்தை நிலைநாட்ட - தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த - அர்ப்பணிப்புடன் பாடுபடுவோம் என்பதை இந்நாட்டுத் தமிழ் மக்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வான் தாக்குதல் விவாதத்தால் நாடாளுமன்றில் நேற்று அமளிதுமளி!

கொழும்பு, நவ. 29

கிளிநொச்சியில் விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதல் தொடர்பாக விவாதிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சிவாஜிலிங்கத்தால் நேற்றுமாலை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணைக்கு ஜே.வி.பியும், அரசும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து, அப்பிரேரணை மீது சிவாஜிலிங்கத்தை விவாதம் நடத்தமுடியாதவாறு தடுத்து நிறுத்தின.

இப்பிரேரணை மீதான விவாதத்தைத் தொடக்கிவைத்த சிவாஜிலிங்கம் தொடக்கத்திலேயே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சி என்று கூறியமையினாலேயே அரச உறுப்பினர்களும் ஜே.வி.பியினரும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்த நாடு ஒற்றையாட்சியின் கீழ் இருக்கின்ற நிலையில், அதைப் பிரித்துக் காட்டும் வகையில் புலிகளின் பிரதேசம் என்று கூறியமை அரசியல மைப்புக்கு முரணானது என்று கூறிய ஜே.வி.பியினர், பிரேரணை சட்டவிரோதம் என்று அறிவித்து, பிரேரணையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவிடாமல் நிறுத்த வேண்டும் என்று சபாநாயகரைக் கேட்டுக் கொண்டனர்.

இந்தப் பிரேரணை அரசியலமைப்புக்கு முரணற்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது என்று சபாநாயகர் கூறினார். அதேபோல் திருத்தம் செய்யப்பட்ட பிரேரணையை நான் இங்கு வாசிக்கின்றேன் என்று சிவாஜிலிங்கம் கூறினார்.

திருத்தம் செய்யப்பட்டாலும் அது அரசியலமைப்புக்கு முரணாகவுள்ளது என்று ஜே.வி.பியினர் கூறினர். உடனடியாக இப்பிரேரணையை ரத்துச் செய்யவேண்டும் எனக் கூச்சலிட்டனர்.

சபாநாயகர் விவாதத்தைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு சிவாஜிலிங்கத்திற்கு உத்தரவிட்டார். ஆனால், ஜே.வி.பியினரும் அரச தரப்பினரும் அவரைப் பேசவிடாமல் கூச்சலிட்டுத் தடுத்தனர்.

### ஆசனத்தை நோக்கி செல்ல முற்பட்டார் மேர்வின்

அமைச்சர் மேர்வின் சில்வா சிவாஜிலிங்கம் பேசுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக சிவாஜிலிங்கத்தின் ஆசனத்தை நோக்கி செல்ல முற்பட்டபோது படைக்கலச் சேவிதர்கள் அவரைத் தடுத்து நிறுத்தினர்.

அப்போது மகேஸ்வரன் ஏதோ பேச எழுந்தபோது, அவரை நோக்கியும் மேர்வின் ஓடத் தொடங்கினார். மகேஸ்வரனும் மேர்வினை நோக்கி தனது ஆசனத்தை விட்டு கிழே இறங்கி வந்தார்.

மேர்வினை படைக்கலச் சேவிர்களும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் தடுத்து நிறுத்தினர். இருந்தும் இருவருக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இந்நிலையில் இப்பிரேரணை சட்டவிரோதமானது என அறிவித்து, இப்பிரேரணையை நிறுத்துமாறு பிரதமர் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தநிலையில் விவாதத்திற்காக ஒதுக்கப்பட்ட முழு நேரமான அரைமணித்தியாலம் முடிவுறும் தருணத்தை நெருங்கியதும் ஓரிரு நிமிடங்கள் மாத்திரமே எஞ்சியிருந்தன:

விவாதத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் இத்தோடு முடிகிறது. இதற்குமேல் நேரம் ஒதுக்கவும் முடியாது. இதுபற்றிப் பேசியும் பயனில்லை. இதற்குமேல் விவாதம் முடிந்து விட்டதாக அறிவியுங்கள் என்று விமல் வீரவன்ஸ சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

கடுப்பாகிப்போன சிவாஜிலிங்கம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்று சத்தமிட்டபடி ஜே.வி.பியினர் மீது கடுமையாகப் பாய்ந்தார்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் பேசும் உரிமையை தடுத்துநிறுத்துவது பாரதூரமானதொன்று. இதன் விளைவை நாம் சந்திக்க நேரிடும். இவ்வாறு உரிமையைத் தடுத்ததன் விளைவை நாம் இப்போது அனுபவிக்கின்றோம் - என்று சபாநாயகர் ஜே.வி.பியினரை நோக்கி கடுமையான தொனியில் கூறினார்.

அந்த நிலையில் 30 நிமிடங்கள் முழுமையாக நிறைவடைந்தன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலைந்து சென்றனர்.

(சி)

## தம்மை ஒருபோதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று புதன்கிழமை நான் மக்களைச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறியும் நாளாகும்.

இந்தத் தினத்தில் நான் நிச்சயம் அமைச்சில் இருப்பேன் என்று புலிகளுக்குத் தெரியும். அதேபோல் நான் காலை 6 மணி முதல் மக்களின் குறைநிறைகளைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்போது 8 மணியளவில் என்னை இலக்குவைத்து அமைச்சுக்கு வந்த புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி என்னை இலக்குவைக்க முடியாத நிலையில் - சோதனைக்கு உட்படுத்தப்பட்டவேளை - தனது உடம்பில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தார்.

இச்சம்பவத்தையிட்டு நான் பயப்படவில்லை. நான் அறிந்தும் அறியாமலும் பல தடவைகள் புலிகள் என்னைக் கொலை செய்ய முயற்சி செய்தனர். எந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

சர்வதேச மட்டத்தில் புலிகளின் பயங்கரவாதத்திற்கு எதிராக நான் குரல்கொடுத்து வருவதைத் தாங்கமுடியாமலேயே புலிகள் இவ்வாறு என்னைக் கொல்ல முயற்சிக்கின்றனர். தேசியப் பிரச்சினைக்கு அமைதிப் பேச்சு மூலம் உரிய தீர்வு கிட்டும் வரை புலிகளால் என்னைக் கொல்லமுடியாது - என்றார்.

(சி)

## கொழும்பில் குண்டுவெடிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குண்டுவெடிப்பை அடுத்த அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அப்பகுதி ஊடாகச் சென்று கொண்டிருந்த வாகனங்கள் என்பன தீப்பற்றி எரிந்தன. அந்த வரிசையில் இருந்த கடைத் தொகுதிகளிலும் தீப்பற்றிக்கொண்டது.

ஒருபுறம் தீப்பிழம்பும், மறுப்பக்கம் படுகாயமடைந்து, உயிரிழந்து நாலாபுறமும் சிதறிக்கிடந்தவர்களுமாக அப்பகுதி பெரும் அல்லோல கல்லோலப்பட்டது.

கொழும்பு மாநகரசபை தீயணைப்புப் பிரிவினரும் இராணுவத்தினரும், பொலிஸாரும் கடும் போராட்டத்துக்கு மத்தியில் தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், காயமுற்றவர்களையும் மீட்டு வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைத்தனர்.

இக்குண்டுவெடிப்பில் ஏழு பெண்களினதும் ஒன்பது ஆண்களினதும் சடலங்கள் களுபோவில வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு சிறுமி உட்பட மூன்று பெண்கள் அவசர மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர். அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

வழக்கமாகவே மிகுந்த சனநெரிசல் உள்ள இப்பகுதியில் நேற்றுமாலை அலுவலக நேரம் முடிந்து ஆட்கள் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோதே இக்குண்டுவெடிப்பு இடம்பெற்றிருக்கின்றது.

இதனால், கொழும்பில் முக்கியத்துவம் வாய்ந்த நுகேகொட சந்தி ஊடான போக்குவரத்து தடைப்பட்டு அதை அண்டிய பிரதேசங்களில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

அப்பகுதியில் நேற்றிரவு மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்தக் குண்டுவெடிப்பு விடுதலைப் புலிகளின் தாக்குதல் கைவரிசை என அரசு குற்றம் சுமத்தியிருக்கின்றது. (அ-சி)

## புலிகள் ஜனநாயகத்தைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடத்திற்குள் நேற்றக்காலை புலிகளினால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டும் இருவர் காயமடைந்தும் உள்ளனர்.

பெண் குண்டுதாரியால் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் எமது கொழும்பு மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர் தோழர் ஸ்ரீபன் பீரிஸ் பலியாகியுள்ளார். அமைச்சின் மெய்ப் பாதுகாவலர்களில் ஒருவரான சித்திரன் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளார்.

அதிர்ஷ்ட வசமாக அந்த வேளையில் அமைச்சரைச் சந்திக்க வந்திருந்த பொது மக்கள் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. புலிகளின் பயங்கரவாதச் செயற்பாட்டின் மூலம் தன்னைக் கொலை செய்ய முடியாது என்றும், இத்தாக்குதலில் எமது நீண்டகால உறுப்பினரான தோழர் ஸ்ரிபன் கொல்லப்பட்டதே பெரும் இழப்பாகும் என்றும் அமைச்சரும், எமது செயலாளர் நாயகமுமாகிய தோழர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவரைக் கொலை செய்து தமிழ் மக்களின் ஜனநாயகக் குரலை மௌனித்துப் போகச் செய்ய வேண்டுமென்பதே பிரபாகரனின் திட்டமாக இருக்கிறது. இந்தச் சம்பவத்துடன் சேர்த்து சுமார் பன்னிரண்டு தடவைகள் நேரடியாக அவரைக் கெலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை ஒவ்வொன்றும் படுதோல்வியையே கண்டுள்ளன.

புலிகளின் இவ்வாறான கொலை முயற்சிகள் அவர்கள் ஜனநாயகம், மாற்றுக்கருத்து என்பவற்றைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்பதையும் அவர்கள் பயங்கரவாதிகள்தான் என்பதையுமே வெளியுலகுக்கு நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான தாக்குதல்கள் தமிழ் மக்களின் கௌரவமான வாழ்வுக்காக நாம் புரியும் மக்கள் சேவைக்கு எந்தவகையிலும் தடையாக அமையாது. மாறாக எமது கட்சியின் வேலைத்திட்டங்கள் சரியான திசையில், சாத்தியமான அணுகுமுறையில் முன்னெடுக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையையே மேலோங்கச் செய்கின்றன.

வயிற்றிலும், மார்பிலும் குண்டுகளைக் கட்டிவிட்டு மரணச் செய்திக்காகக் காத்திருக்கும் பிரபாகரனின் பாஸிசப் போக்கும், இரத்த வெறியும் எமது மக்களின் வாழ்வில் சமாதானத்தை ஒருபோதும் ஏற்படுத்தாது. மாறாக அவலங்களையும், நெருக்குவாரங்களையுமே அதிகரிக்கச் செய்யும், இதைப் பிரபாகரன் புரிந்துகொள்ளும் மனோநிலையில் இல்லாது, கொலைகள் பற்றிய தாகத்தில் அதைப் பற்றியே சிந்திக்கும் ஒரு மன நோயாளியாகவே இருக்கின்றார்.

கொலைகளைத் தவிர வேறெதுவும் தெரியா பிரபாகரனால் தன் மக்களின் கௌரவமான வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க முடியாது.

ஆனால், மக்கள் அச்சமின்றி தமது உரிமைகளுடன் வாழவேண்டுமென்பதற்காகவே ஈ.பி.டி.பி. யினராகிய நாம் பாஸிசப் புலிகளின் படுகொலைகளையும் தாண்டி சேவையாற்றி வருகின்றோம். எமது பணி தொடர மக்களாகிய நீங்கள் எமக்கு பக்கபலமாக இருக்கும்வரை உங்களுக்காக நாம் உழைப்போம் - என்று உள்ளது. (அ)

## மேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயந்த தெரிவித்திருக்கிறார்.

இன்றும் நாளையும் நடைபெற இருந்த மூன்றாம் தவணைப் பரீட்சைகள் மீண்டும் நடைபெறும் தினத்தை பாடசாலைகள் ஆரம்பித்த பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(சி)

## அமைச்சர் டக்ளஸின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8.05 மணியளவில் அமைச்சரைச் சந்திப்பதற்காக பலர் வரிசையில் காத்து நின்றனர்.

அந்த வரிசையில் சேலை அணிந்து -போலியோ நோயால் பாதிக்கப்பட்டவர் போல - காணப்பட்ட ஒரு பெண்ணை பாதுகாப்புச் சோதனைக்கு உட்படுத்துவதற்காகப் பெண் பொலிஸாரை பாதுகாப்பு அதிகாரிகள் அழைத்தனர் என்று கூறப்படுகின்றது. அச்சமயமே அந் தப் பெண் தான் மறைத்து வைத்திருந்த குண்டை வெடிக்க வைத்துத் தனது உயிரையும் மாய்த்துக் கொண்டார் என்றும் கூறப்பட்டது.

இத்தாக்குதலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பொதுசனத் தொடர்பு அதிகாரியும், ஈ.பி.டி.பி. கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான ஸ்டீபன் பீரிஸ் (வயது - 72) என்பவர் படுகாயமடைந்து, பின்னர் மரணமானார்.

இச்சம்பவத்தில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த நியாஸ் சித்திரன் என்பவரும் மற்றொருவரும் படுகாயமடைந்தனர். அவர்கள் இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர் எனக் கூறப்படும் பெண், தனது மார்புக்கச்சைக்குள்ளேயே வெடிகுண்டை மறைத்து எடுத்து வந்தார் என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு அருகில் காணப்பட்ட அடையாள அட்டையில் வவுனியா, ஆண்டபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்த சரவணன் சுஜாந்தா என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு 5 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன எனக் கொழும்பு, பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் மெதிவக்க தெரிவித்தார். (சி)

புதிய கல்வி ஆண்டிற்கான புதிய பாட அலகுகள்
(தமிழ்/ஆங்கில மொழிமூலம்)
Dec 9ல் ஆரம்பம்
அனுமதிகள் Dec 8 வரை மட்டுமே வழங்கப்படும்.
35 1973 - 2008
"எம்முடன் இணைந்தோர் என்றும் உயர்ந்ததே வரலாறு" -அதிபர்
The Express Institute
Irupalai, Kopay.

NEW SCIENCE CENTRE
யாழ் நகர்
Properitor:- Poobalasingum
A/L 2009 INORGANIC
Sat, Sun- 11-12.30
ஆரம்பம் 02/12/2007
A/L 2008
PHYSICAL CHEMISTRY
Sat, Sun- 12.30-2.00
ஆரம்பம் 02/12/2007
By:- யாழ். முன்னணி ஆசிரியர்

புதிய நிருட்டன் அக்கடமி
அரசடிப் பிள்ளையார் கோவில் முன்பாக கோண்டாவில்.
புதிய கல்வியாண்டு 2008 தரம் 1 முதல் O/L வரை
சகல வகுப்புக்களும் "Super Grade" ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படும்.
கணிதம்:- திரு.சசிகாந், திரு.உதயன், திரு.வசந்தன்
விஞ்ஞானம்:- திரு.சிவராசன், திரு.யூட்
ஏனைய சகல பாடங்களும் கற்பிக்கப்படும். அத்துடன் எமது மாணவர்களுக்கு கணனி வகுப்பும் நடைபெறும்.
ஆரம்பம்:- 01.12.2007 சனி பி.ப 3.15 அனுமதிக்கு முந்துங்கள்

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசிங்கம் அன்னலட்சுமி

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் அன்னலட்சுமி நேற்று (28.11.2007) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2007) வியாழக் கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பாலசிங்கம் (கணவர்),
பிள்ளைகள், சுஜீவன் (மருமகன்),
சி.கனகசபை (கிளி-தம்பி).

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
0214591043

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org